



# The Trumpet of the Seventh Angel
# ஏழாம் தூதனின் எக்காளம்

1879 - 1916 ரீ-பிரிண்ட்ஸ் தமிழாக்கம்
மலர் - 7 இதழ் - 6, நவம்பர் - டிசம்பர் 2021

**R5246**

## TRANSFORMING INFLUENCE OF THOUGHT
## எண்ணத்தின் ஆதிக்கத்தை மறுரூபமாக்குதல்

"அவன் இருதயத்தின் நினைவு எப்படியோ அப்படியே அவன் இருக்கிறான்." (நீதிமொழிகள் 23:7)
"எல்லா காவலோடும் உன் இருதயத்தை காத்துக்கொள், அதனிடத்தினின்று ஜீவ ஊற்று புறப்படும்."- நீதிமொழிகள் 4:23.

இருதயம் என்பது நமது அவயவகளில் முக்கியமான ஒன்றாக இருக்கிறது. அது இயங்குவதை நிறுத்தினால் மரணம் நிச்சயம் வரும். இருதயத்தின் மூலமாக ஓடுகிற இரத்தமே சரீரத்திற்கு சக்தியை, ஜீவனை தருகிறது. சிறிது நேரத்திற்கு இரத்தம் ஓட்டம் தடுக்கப்பட்டால் ஒரு இரத்தம் உறைதல் உருவாகிறது. அது மரணத்திற்கு வழி வகுக்கிறது. ஜீவனை தக்கவைத்துக் கொள்ளுவதற்கு தொடர்ச்சியான இரத்த ஓட்டம் இருக்க வேண்டும்.

நமது இயற்கையான இருதயங்களின் இந்த முக்கியமான இயக்கத்தை பார்க்கும் போது, வேதாகமம், ஜீவனின் மையமாக விளங்கும் இருதயத்தை நமது சித்தம் மற்றும் எண்ணத்தின் மையத்தின் அடையாளமாக மிகவும் சரியாக பயன்படுத்துகிறது. நாம் செய்கிற ஒவ்வொன்றுடனும் நமது சித்தம் கிரியை செய்கிறது. கர்த்தருடைய பிள்ளைகளாக இருக்கிறவர்கள் அதிகமதிகமாக தங்களை பரிசுத்தப்படுத்திக் கொண்டு அதிகமதிகமாக ஜீவனுடையவர்களாயிருக்க நாடுகிறார்கள். நாம் இருதயத்தில் சுத்தமுள்ளவர்களாக இருந்தால், தற்கால வாழ்க்கையில் நீதியுடனும் நிதானத்துடனும் வாழ தீர்மானிப்போம். சரியானதை சரி என்றும் தவறானதை தவறு என்றும் உணருகிறவர்கள், அவர்கள் யூதனாக இருந்தாலும் புறஜாதியானாக இருந்தாலும் அல்லது தேவனுடைய சபையாக இருந்தாலும் அவர்கள் சரியாக வாழ விரும்புவார்கள்.

சபையானது தேவனுடைய நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டு தனது ஜீவனை அவரிடத்தில் அர்ப்பணம் செய்திருக்கிறது. அவர்கள் உலகம், மாம்சம் மற்றும் பிசாசுவுடன் ஒரு நல்ல போராட்டத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்கள் புது சிருஷ்டிகளாக விசேஷித்த கடமைகளின் கீழ் இருக்கிறார்கள். அவர்களது நம்பிக்கைகளும் உயரிய நோக்கங்களும் உலகத்தாரிலிருந்து வேறானதாக இருக்கின்றன. ஆகையால் அவர்கள் தங்கள் உள்ளுணர்வை குறிக்கக்கூடிய தங்கள் இருதயத்திற்கு இரட்டிப்பான பொறுப்புடையவர்களாக இருக்கிறார்கள்.

ஒரு மனிதனுடைய உள்ளுணர்வைப் போலவே அவன் இருக்கிறான். ஒரு மனிதன் தன் இருதயத்தில் நினைப்பது போலவே அவனது உண்மையான குணலட்சணம் இருக்கிறது. உன்னுடைய உண்மையான சித்தம் என்ன? உன்னுடைய உண்மையான உள்ளுணர்வுகள் என்ன? என்ன வார்த்தைகளை நீ பயன்படுத்துவாய்? உன்னுடைய செயல்கள் என்ன? இவை எல்லாவற்றிலும் தொக்கி நிற்கிற உத்தேசம் என்ன?

புது சிருஷ்டி தேவனைப் போன்றும் ஆவிக்குரியவர்களாகவும், முடிவாக மகிமையிலும் பூரணத்திலும் ஆவியின் சுபாவமுடையவர்களாக இருக்க வேண்டும். ஆனால் அந்த பூரணத்தை அடைவதற்கு முன்னதாக புது சிருஷ்டியின் இருதயமானது அதன் உண்மைத்தன்மையை நிரூபிக்க வேண்டும். சிலர் மற்றவர்களைக் காட்டிலும் மேலான ஜெயங்கொண்டவர்களாக இருப்பார்கள். ஆனால் உண்மையும் பரிசுத்தமும் விசுவாசமும் உள்ளவர்களைத் தவிர வேறு யாரும் ஜெயங்கொண்டவர்களாக இருக்க மாட்டார்கள். ஆகையால் நாம் தேவனுடன் அர்ப்பணம் செய்திருக்கிறபடியால், நமது இருதயங்களும், நமது விருப்பங்களும், நோக்கங்களும் பூரணமாக இருக்க முயற்சி செய்கிறவர்களாக இருக்க வேண்டும். நாம் தவறு செய்தால் நமது அபூரணத்தை அறிக்கை செய்து மன்னிப்பு கேட்கிற மனோபாவமே உயர்ந்ததாகும். நாம் இருதயத்தில் உண்மையுள்ளவர்களாக இருக்க வேண்டும் என்று தேவன் எதிர்பார்க்கிறார். அந்த இருதய உண்மைத் தன்மை நீண்டு முழு வாழ்க்கையையும் கட்டுப்படுத்த வேண்டும்.

நமது உயர்ந்த நோக்கத்திற்கிசைய நமது எண்ணங்கள் இல்லையென்றால் அவ்வாறு இருக்க நாம் முயற்சி செய்ய வேண்டும். கோபம், சண்டைகள், குரோதங்கள், பகைகள் மற்றும் சாத்தான், மாம்சீக செயல்பாடுகள் அனைத்தையும் நாம் ஒதுக்கி தள்ள வேண்டும். இந்த எண்ணங்கள் சில மனிதர்களிடம் சில நிலைமைகளில் மிகவும் ஆழமாக போகின்றன. இவைகள் மனதில் தோன்றி மறைகிற எண்ணங்கள் அல்ல - கடந்து செல்லும் எண்ணங்கள். இதுதான் நமது தலைப்பு வசனத்தின் பொருள். மிகவும் மோசமான குணலட்சணமுடைய மனிதர்கள் கூட சில சமயங்களில் ஆழ்ந்த மனவெழுச்சி உடையவர்களாக இருக்கிறார்கள். சில அற்பமான காரியங்களுக்கு கூட சிலரது கண்களில் கண்ணீர் சொரியும். இது அவர்களை மிக மென்மையான இருதயம் உடையவர்களாக காணும்படி செய்கிறது. இது அவர்களை சில தீய செயல்களுக்கு சுலபமாக நகர்த்தப்பட கூடியவர்களாக ஆக்கும்.

இந்த உண்மை திரளான ஜனங்களின் நடத்தையின் மூலமாக விளக்கப்பட்டது. இயேசுவை ராஜாவாக வாழ்த்தின ஜனங்கள், ஐந்து நாட்களுக்கு பிறகு, "அவரை சிலுவையில் அறையும்!" என்று கூக்குரலிட்டார்கள். அவரை புகழ்ந்தவர்களாக காணப்பட்டவர்கள், சீக்கிரத்தில் அந்த புகழ்ச்சியை மறந்தவர்களாக காணப்பட்டார்கள்.

## சரியான சிந்தனையின் முக்கியத்துவம்

ஒரு மனிதன் வெளியரங்கமாக தெரிகிறது போல உண்மையில் அது போல எப்பொழுதும் இருப்பதில்லை. அவனது வாழ்க்கையின் நோக்கம் அவனது உண்மையான குணலட்சணம் மிகவும் ஆழத்தில் இருக்கிறது. இவை வெறும் தோன்றி மறையும் எண்ணங்கள் அல்ல, ஆனால் ஆழமான சிந்தனை வெடிப்புகள். அவைகள் முழு வாழ்க்கையிலும் ஈடுபடக்கூடியவைகளாக இருக்கின்றன என்று நாம் கூறலாம். நமது மனதை புதுப்பித்து மறுரூபமாக்க வேண்டும் என்ற உண்மையை வேத வாக்கியங்கள் நமது கவனத்துக்கு கொண்டு வருகின்றன. (ரோமர் 12:2)

அப்போஸ்தலர் சில தீய குணலட்சணத்தின் பண்புகளைப் பற்றி கூறும் போது அவர் கூறுகிறதாவது: "உங்களில் சிலர் இப்படிப்பட்டவர்களாயிருந்தீர்கள்; ஆகிலும் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலும், நமது தேவனுடைய ஆவியினாலும் கழுவப்பட்டீர்கள், பரிசுத்தமாக்கப்பட்டீர்கள், நீதிமான்களாக்கப்பட்டீர்கள்." (1 கொரிந்தியர் 6:11 ) இந்த கழுவப்படுதலும், இந்த பரிசுத்தமாக்கப்படுதலும், சத்தியத்தை படிக்கிறதினால் மட்டுமோ அல்லது அதை மனதில் வைக்கிறதினால் மட்டுமோ வருவதில்லை. ஆனால் சத்தியத்தை மனதிலே தியானிக்கிறதின் மூலமாகவே வரும். இந்த இதய சிந்தனை, இந்த ஆழ்ந்த தீர்மானங்கள் கிறிஸ்தவர்களாக நமக்கு உரியது. இன்னும் அவைகள் உறுதியான கொள்கைகள் மூலமாக வழிகாட்டப்பட வேண்டும். தேவன் கவனிக்கிற உண்மையான மனிதனோடு இது நடைபெற வேண்டும், பழைய சிருஷ்டியோடு அல்ல. ஏனெனில் ஒரு அளவான சீரழிவினால் அது ஏறக்குறைய களங்கப்பட்டிருக்கிறது. தேவன் புது சிருஷ்டியைத்தான் பார்க்கிறார்.

இந்த ஆழ்ந்த திட நம்பிக்கைகளும் குறிக்கோள்களும் இணைந்து குணலட்சண மாற்றத்தை ஏற்படுத்துகிறது. இதுதான் மனிதனின் உண்மையான நிலைமை. அவன் அதேபோல இருக்கிறான். தோன்றி மறைகிற கோபம் அல்லது துர்க்குணம் போன்ற சில உணர்ச்சிகளை அவன் பெற்றிருந்தால், அது அவனது உண்மையான எண்ணமாக, உண்மையான குறிக்கோளாக இருக்காது. ஆகையால் அது அவனாக இல்லாமல், அது அவனது பழைய சிருஷ்டியாக இருக்கிறது. தற்காலிகமாக வற்புறுத்துகிறதாக இருக்கிறது. ஒரு புது சிருஷ்டியாக, அவன் தனது வார்த்தைகள், சிந்தைகள் மற்றும் கிரியைகளை கவனிக்கிறவனாக இருக்க வேண்டும். அது தற்காலிகமான மனதில் தோன்றி மறைகிற தவறான எண்ணமாக இருந்தால், அது அவனது இருதயத்தின் எண்ணமாக இருக்காது. அது அவனது இருதயத்தில் வேர் விடாதபடிக்கும், நல்ல உணர்வுகளை அடைக்காதபடிக்கும், ஒரு புது சிருஷ்டியாக அதை தடுக்க வேண்டும், அதை நீக்க வேண்டும்.

இருதயத்தின் இந்த சரியான எண்ணம் முழு வாழ்க்கையிலும் மிகவும் அதிகமாக கிரியை செய்ய வேண்டியிருக்கிறது. தேவனுடைய பரிபூரண சித்தம் இன்னதென்று அறிய நமது மனங்களை புதுப்பிப்பதின் மூலம் நாம் மறுரூபமாக்கப்படுகிறோம் என்று அப்போஸ்தலர் கூறுகிறார். இதுதான் கிறிஸ்தவனின் நிலைப்பாடு. நமது பரலோக பிதாவானவர், இந்த நிலைப்பாட்டிலிருந்துதான் நம்மை நியாயத்தீர்ப்பு செய்கிறார் என்பது நமக்கு எவ்வளவு சந்தோஷமாக இருக்கிறது! அவர் நமது இருதயத்தை அறியக்கூடியவராக இருக்கிறார்; நமது இருதயங்களை அறிகிறார், நமது ஆழ்ந்த உள்ளான எண்ணங்களை அறிகிறார் என்பதினால் நாம் எவ்வளவு சந்தோஷமடைகிறோம்!

ஒரு சமயத்தில் நாம் தேவனுக்கு ஊழியம் செய்யாதபோது அவருக்கு ஊழியம் செய்ததாக நாம் நினைத்தோம். அவரது சித்தம் என்ன என்பதை அறியும்படிக்கு, அவரது வார்த்தைகளில் கவனம் செலுத்தி, தேவனுக்கு நமது விசுவாசத்தை நாம் காண்பிக்கிறோம். தேவனுடைய வார்த்தையை ஆராய்கிற அளவுக்கு அவரது சத்திய ஆவியை அதிகமாக பெற்று அதை நாம் சரியாக உணர்ந்து கொள்ளுகிறோம். அவைகளால் வழிகாட்டப்பட்டபடி நாம் தேவனின் ஒழுங்குகளையும் விருப்பங்களையும் புரிந்துகொள்ளுகிற அளவுக்கு நமது இருதயம் தூய்மையடைகிறது. பிறகு நமது கைகள் எப்படிப்பட்ட கிரியைகளை நடப்பிக்க வேண்டும், நமது நாவுகள் எப்படிப்பட்ட வார்த்தைகளை சொல்ல வேண்டும் என்பதைப் பற்றி அதிக அக்கறை எடுத்துக் -கொள்ளுகிறோம். இப்படியாக நமது இருதயத்தை வைத்து தேவனுடைய சித்தத்திற்கு நமது சித்தத்தை அர்ப்பணிக்கிறோம்.

இந்த சித்தம், கப்பலுக்கு சுக்கான் ஒரு பாகமாக இருப்பது போல, நமது இருதயத்தின் ஒரு பாகமாக இருக்கும். புதிய சித்தமே இந்த வழியிலோ அல்லது அந்த வழியிலோ செலுத்துகிற சுக்கானாக இருக்கும். கர்த்தரின் வார்த்தைகளை எவ்வளவு அதிகமாக புரிந்து கொள்ளுகிறோமோ அந்த அளவுக்கு அதிகமாக நமது வாழ்க்கையை வழிகாட்ட புரிந்துகொள்ளுவோம். ஆகையால் நமது இருதயங்களை வழிகாட்ட புரிந்து கொள்வோம். ஆகையால் நமது இருதயங்களை செயலில் வைத்து, தேவனுடைய சத்தியத்தை ஆராய்வதின் மூலமும் தேவனுடைய சத்திய அறிவின் மூலமும் அவைகளை பரிசுத்தப்படுத்த வேண்டும். நாம் எப்பொழுதும் இதைச் செய்ய ஜெபத்துடனும் ஸ்தோத்திரத்துடனும் விழித்திருந்து ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.

## ஜீவனுக்கான சோதனையில் சபை

இதையெல்லாம் நாம் ஏன் செய்ய வேண்டும் என்று யாராவது ஒருவர் கேட்கலாம். சரியானது சரியாக இருப்பதால் நாம் சரியானதை செய்ய வேண்டும் என்று நாம் பொதுவாக பதிலளிக்கலாம். ஆனால் காரணம் நமக்கு போதுமானதாக இருக்கவில்லை. தவறைக் காட்டிலும் சரியானது உயர்ந்திருக்கிறதை எல்லோரும் உணருகிறபோது நமது பலவீனமான நிலைமையில் தூண்டுதல் அவசியமாக இருக்கிறது. ஆகையால் நமது கர்த்தர் சில குறிப்பிட்ட தூண்டுதல்களை நமக்கு வைக்கிறார். அவர் கூறுகிறதாவது: "உனது இருதயம் செம்மையானதாக இருந்தால் உனக்கு நித்திய ஜீவனை கொடுக்க நான் விரும்புவேன். உனது இருதயம் செம்மையானதாக இராதிருந்தால் நான் இந்த வரத்தை அளிக்கக் கூடியவனாக நீ இருக்கமாட்டாய். நீ இரண்டாம் மரணத்தில் மரிப்பாய்."

ஆறாயிரம் வருடங்களுக்கு முன்பு ஒரு சோதனை இருந்தது. நமது முதல் தகப்பன் ஆதாம் சோதிக்கப்பட்டு தோல்வியடைந்தார். அதன் பலனால் நமக்கு ஜீவிக்கக்கூடிய உரிமை இல்லை. ஆனால் தேவன், நமது

கர்த்தராகிய இயேசு மூலம் ஆதாமின் இனத்தில் ஒவ்வொரு அங்கத்தினரும் வேறொரு சோதனையை சந்திக்க ஏற்பாடு செய்திருக்கிறார். நீதியை சிநேகிக்கிற அனைவருக்கும் நித்திய ஜீவனை அளிக்க பிதாவானவர் பிரியமாயிருக்கிறார்.

ஆகையால் இந்த கிருபையை நன்றியுடன் ஏற்றுக்கொண்டு நாம் கூறுகிறதாவது: "பரம பிதாவே, நாங்கள் நித்திய ஜீவனை பெறுவதற்கு உண்மையிலேயே இன்னொரு சந்தர்ப்பத்தை கொடுப்பீரா? அந்த ஜீவனை பெற நாங்கள் விரும்புகிறோம்! நீதியின் கொள்கைகளுக்கு நாங்கள் உண்மையுள்ளவர்களாக இருந்தால் நாங்கள் நித்திய ஜீவனை பெற்றுக்கொள்வோமா? நாங்கள் நீதியை சிநேகித்து, அக்கிரமத்தை வெறுத்தாலும் உம்முடைய சித்தம் எங்களில் நிறைவேற விரும்புகிறோம்." பரம பிதாவானவர் கூறுகிறதாவது: "மிகவும் நல்லது, நீங்கள் நீதியை கற்றுக்கொள்ளும்படியாக கிறிஸ்துவின் பள்ளியில் உங்களை வைப்பேன்."

ஒவ்வொரு நாளும் நாம் கிறிஸ்துவின் பள்ளியில் கற்றுக்கொண்டிருக்கிறோம். நீதியை சிநேகித்து, கர்த்தரைப் பற்றி போதிக்கப்பட விரும்புகிறவர்களுக்கு நமது வெவ்வேறு அனுபவமே பொதுவான படிப்பினைகளின் ஒரு பகுதியாக இருக்கிறது. இந்த சோதனையின் பலன் ஜீவன் அல்லது மரணமாக இருக்கும். உலகமானது இப்பொழுது சோதனையில் இல்லை. உலகமானது ஜீவனைப் பெற இன்னும் சாத்தியமாகவில்லை. சுவிசேஷ யுகத்தில் சபை மட்டுமே பலியின் உடன்படிக்கைக்கு கீழாக இருக்கிறது. ஆகையால் சபையானது நித்திய ஜீவனா அல்லது நித்திய மரணமா என்கிற சோதனையில் இருக்கிறது. அடுத்த யுகத்தில் உலகமானது கீழ்ப்படிதலை கற்றுக் கொள்வதற்கான சந்தர்ப்பத்தை பெறும். அப்பொழுது ஜீவனா அல்லது மரணமா என்கிற சோதனையில் இருப்பார்கள்.

தேவன் கூறுகிறதாவது: "நான் உனக்கு முன்னே ஜீவனையும் மரணத்தையும் ஆசீர்வாதத்தையும் சாபத்தையும் வைக்கிறேன்." அநீதியை சிநேகிக்கிற ஒவ்வொருவருக்கும் சாபமும், நீதியை சிநேகிக்கிற ஒவ்வொருவருக்கும் ஆசீர்வாதமும் இருக்கிறது. ஆகையால் ஆயிரம் வருட கிறிஸ்துவின் ராஜ்யத்தில் உலகமானது நித்திய ஜீவனா அல்லது நித்திய மரணமா என்கிற சோதனையில் இருக்கும். கீழ்ப்படிகிற அனைவரும் நித்திய ஜீவனைப் பெறுவார்கள். ஆனால் சாத்தானின் ஆவியை பெற்றிருப்பவர்கள் அனைவரும் இரண்டாம் மரணத்தில் அழிக்கப்படுவார்கள்.

முற்றும் ஜெயங்கொண்டவர்கள் மட்டுமே ராஜரீக ஆசாரியர்களாவார்கள். நாம் திரள் கூட்டத்திற்குள் செல்வதில் எந்தவித சாக்குப்போக்கும் இல்லை. எல்லாக் காவலோடும் நம் இருதயத்தைக் காத்துக்கொள்வோமாக. நமது இருதயத்தை விழிப்புடன் கவனிப்போமாக. நமது இருதயங்கள் தேவனுடைய சித்தத்துக்கு முழு இசைவாக இருந்தால் நமது வார்த்தைகளில் சிக்கல் குறைவாகவே இருக்கும். "இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும்." (மத்தேயு 12:34)

நமது சரீரத்தில் மிகவும் அற்புதமான பாகம் நமது இருதயம். நமது சகல சரீர அங்கங்களிலும் நமது நாவானது மிகவும் தந்திரமுள்ளது. கர்த்தர் நமது வார்த்தைகளை நமது இருதய நிலைமையின் குறியீடாக எடுத்துக் கொள்கிறார். ஆனால் நாம் அபூரணராக இருப்பதால் வார்த்தையிலும் கிரியைகளிலும் குற்றமில்லாமல் நம்மால் இருக்க முடியவில்லை. எனினும் நாம் உண்மையுடனும் விடா முயற்சியுடனும் நமது வார்த்தைகளில் பூரண தேர்ச்சியடைய நாட வேண்டும். தீமையானவைகளை பேசுவதில் நாம் விசேஷமாக காவல் வைக்க வேண்டும். ஒவ்வொரு பொல்லாங்கான போக்கும் சரிபார்க்கப்பட வேண்டும். நாம் பழிக்குப்பழி வாங்கக்கூடாது. ஏனெனில் பழிவாங்குதல் என்பது பழைய சுபாவம். ஆண்டவருக்கு பிரியமாயிருக்க நாம் தீமையின் ஒவ்வொரு வடிவத்திலிருந்தும் நமது இருதயத்தை விலகியிருக்கப் பண்ண வேண்டும். இது நடப்பிக்கப்பட்டால் இருதயம் கர்த்தரால் சரியானபடி போதிக்கப்படும். பிறகு தவறானவைகளை எல்லாம் சரி பண்ண நாம் அறிந்து கொள்ளுவோம். நமது திறமைக்குத் தக்கதாக நன்மை செய்ய நாம் பிணைக்கப் -பட்டிருக்கிறோம், முற்றிலுமாக பிணைக்கப் -பட்டிருக்கிறோம். நமது இருதயமே சரியானதை வைத்திருக்க வேண்டும்.

## நவீன கல்வியில் குறைபாடுகள்

ஓரளவுக்கு எட்டப்படாமல் இருந்தாலும் இதுவே அகில உலகத்திற்கும் பொருந்தக்கூடிய கொள்கை. மனுக்குலமானது சிந்தனைகளாலும், அனுபவங்களினாலும் செல்வாக்கு பெற்றுள்ளது. எனவே தீய பிள்ளைகள் பிரயோஜனமுள்ள குடிமகனாவதற்கு அவர்கள் சாதகமான சூழ்நிலைகளில் பயிற்றுவிக்கப்படலாம். கிறிஸ்தவர்களாக இல்லாதவர்களும் கூட நேர்மையாகவும், நீதியாகவும், வாழ்வதற்கு நல்ல தீர்மானம் எடுத்து, மேன்மையான மனிதர்களாகவும் பெண்களாகவும் வாழ்ந்து ஆசீர்வாதங்களை பெற்றிருப்பதை நாம் பார்த்திருக்கிறோம்.

இதற்கு எதிர்மாறானதையும் நாம் பார்த்திருக்கிறோம். அவசியமில்லாமல் குற்றவாளிகளானவர்களையும் பார்த்திருக்கிறோம். அவர்களில் சிலர் நல்ல நிலைமைகளில் பிறந்திருந்தார்கள். ஆனால் தீய புத்தகங்களை படித்து பாவகாரியங்களை தியானம் செய்தார்கள். இப்படியாக அவர்களது இருதயத்தின் சிந்தனைகள் நன்மைக்கு பதிலாக தீமையாக இருக்கின்றன. இப்படியாக அவர்கள் தீயவர்களாக ஆகிவிட்டார்கள். அவர்கள் தங்களது சிந்தையை ஒரு குறிப்பிட்ட திசையில் ஓடவிட்டதனால் இந்த சிந்தனைகளை அவர்களது இருதயத்தின் ஆழத்தில் வேர் விட அனுமதித்ததால் அவர்களில் சிலர் மிகவும் தீயவர்களாக ஆகிவிட்டனர்.

சமீபத்தில் நியூயார்க்கில் கொலைக்குற்றம் சாட்டப்பட்ட துப்பாக்கியுடனான நான்கு மனிதர்களின் புகைப்படங்களை பார்த்தபோது, இந்த உண்மையினால் நாங்கள் கவரப்பட்டோம். அவர்கள் யார் என்பதை அறியும் முன்னே அவர்களது புகைப்படங்களை நாம் பார்த்திருந்தால் அவர்கள் பலமான குணலட்சணமுடை -யவர்கள் என்று நாம் கூறியிருப்போம். தவறான கல்வியினாலும், நீதியின் கொள்கைகளை உணரத்தவறியதாலும் அவர்களது இருதயம் தவறாகிப் போனது. இதுவே தற்காலத்தில் அதிகமாக காணப்படுகிற காரியமாக இருக்கிறது. வெகு சிலரே நீதியின் கொள்கைகளை காண்கிறார்கள். ஏறக்குறைய

வஞ்சகமானதும் தோன்றி மறைகிறதுமான நம்பிக்கைகள், பயம் மற்றும் மூட நம்பிக்கை ஆகியவைகளினால் பெரும்பாலானவர்கள் வசீகரிக்கப்பட்டிருக்கிறார்கள்.

ஆகையால் தற்கால கல்வி ஒரு முக்கிய காரியத்தில் மிகவும் பின்தங்கி இருக்கிறது. அறியாமை மற்றும் மூடநம்பிக்கையின் திரைகளை பள்ளிகள் ஓரளவுக்கு நீக்கியிருந்தாலும் சரியான நீதியின் கருத்தை முழுமையாக கொடுக்கவில்லை. தெய்வீக குணலட்சணம் மற்றும் தெய்வீக சட்டங்களை பொதுவான வழியில் அசட்டை பண்ணினதே இதற்கு காரணம். தெய்வீக சட்டத்தை முற்றிலுமாக ஒதுக்கிவிட்டு நன்னெறியை போதிக்கிற முயற்சி நடந்துக்கொண்டிருக்கிறது. இந்த மார்க்கம் விசுவாசத்தை பலவீனப்படுத்தி அதாவது சர்வ வல்லமையுள்ள சிருஷ்டிகரில் உள்ள விசுவாசத்திலிருந்து மாணவர்களை பிரிக்கும் மார்க்கமாக காணப்படுகிறது. உலகமானது கல்வியில் ஆச்சரியமான முன்னேற்றத்தை செய்து வருவதை நாம் காண்கிறோம். எனினும் இதன் சீரிய எல்லையை இன்னும் அடையவில்லை. விழுந்துபோன மற்றும் நெறிதவறிய நிலைமையில் இருக்கும் மனித சிந்தை, நன்னெறி பாடத்தை கல்வியாளர்கள் முன்னே வைக்கிற அளவுக்கு பார்க்க முடியவில்லை.

தாழ்ந்த உறுப்புகளுக்கு உதவிட உயர்ந்த உறுப்புகளின் செல்வாக்கு மனித மனதிற்கு தேவைப்படுகிறது, இந்த கல்வியின் செல்வாக்கு அநேக விஷயங்களில் அனுகூலமாக இருந்தாலும் மற்ற காரியங்களில் அது தீங்கிழைக்கக்கூடியதாக இருக்கிறது. இது தேவன் மற்றும் தெய்வீக சித்தம் ஆகியவைகளில் பக்தியை கற்பிப்பதில்லை. ஆகையால் ஜனங்கள் உயர்ந்த கொள்கைகளை கிரகித்து கொள்ள முடியவில்லை. தெய்வீக ஏற்பாடுகளுக்கு ஊர்ஜிதம் செய்யப்பட்ட சிந்தைகளைப் பெற புதிய சிந்தைகளை தேடுகிற நல்ல மனோபாவத்தில் இருப்பவர்கள் மட்டுமே, அவர்களது சொந்த தீர்மானம் மற்றும் சொந்த கற்பனைக்கும் பதிலாக கிறிஸ்துவின் சிந்தையை எடுத்துக்கொள்கிறார்கள். இப்படியாக அவர்கள் கிறிஸ்துவுக்குள் எல்லா காரியங்களிலும் வளருகிறார்கள். இது நமது சந்தோஷமான நிலைமை.

## ஆரோக்கியத்தின் மீதான சிந்தனையின் செல்வாக்கு

“அவன் இருதயத்தின் நினைவு எப்படியோ, அப்படியே அவன் இருக்கிறான்” என்கிற வசனத்திற்கு கிறிஸ்தவ விஞ்ஞானிகள் வேறொரு கருத்தை கொடுக்கிறார்கள். அதாவது நமது சிந்தையின்படியே நாம் இருப்போம். இந்த கருத்திலிருந்து அவர்கள் சில நல்லதை பெறுகிறார்கள். ஒருவன் கருணை, மேன்மையான காரியங்களை நினைத்தால் அவன் இப்படியாக செல்வாக்கு செலுத்தப்படுவான் என்று அவர்கள் கூறுகிறார்கள். நமது கிறிஸ்தவ விஞ்ஞான நண்பர்கள் கொஞ்சம் சரியாகவும் கொஞ்சம் தவறாகவும் இருக்கிறார்கள் என்று நாங்கள் நினைக்கிறோம். ஒருவன் தான் நன்றாக இருக்க வேண்டும் என்று நினைத்தால் அவன் நன்றாக இருப்பான்; ஒருவன் வியாதிப்படுவோம் என்று நினைத்தால் அவன் வியாதியடைவான் என்று கூறுகிறார்கள். இந்த கருத்தில் கொஞ்சம் உண்மையிருக்கிறது.

உலகில் பாதி ஜனங்கள், தாங்கள் வியாதிப்பட்டிருக்கிறோம் என்று நினைப்பதினால் வியாதிப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் தங்கள் வலிகளையும் நோவுகளையும் சிந்தியாமல், அதிகமாக பயனுடைய காரியங்களை சிந்தித்தால் அவர்கள் எல்லா வழிகளிலும் சந்தேகத்திற்கிடமில்லாமல் நன்றாகவும் பலமுள்ளவர்களாக இருப்பார்கள். தலைவலியைக் குறித்து ஒருவன் மனந்தளர்ந்தால் அவன் இன்னும் அதை மோசமாக்குகிறான். தனது நிலைமையைக்குறித்த எண்ணத்தை ஒதுக்கி வைத்துவிட்டு மற்ற காரியங்களில் கவனம் செலுத்தினால் சந்தேகத்திற்கிடமின்றி தனக்குத்தானே உதவி செய்து கொள்கிறான்.

நமது வலியைப் பற்றி, நோவைப் பற்றி எவ்வளவு குறைவாக நாம் நினைக்கிறோமோ அந்த அளவுக்கு நமக்கு நல்லது. நாம் அதைப் பற்றியே பேசிக்கொண்டிருந்தால் இன்னும் நாம் அதை அதிகப்படுத்துகிறோம். ஒருவருக்கொருவர் அதிகமான இரக்கத்தை அப்பியாசப்படுத்துவதும் நல்லதல்ல. கருணை காட்ட வேண்டிய சமயத்தில் அப்பியாசப்படுத்தவில்லை என்றால் அது நிச்சயமாக கொடுமையானதாக இருக்கும். ஆனால் தங்களது நிலைமைக் குறித்து குறை கூற பலவீனமாக இருக்கிறவர்களை ஊக்குவிப்பது ஞானமான செயலாக இருக்காது. நமது வியாதிகளைக் குறித்து நினைப்பதை தவிர்க்க முயற்சிப்பதற்கு ஏற்ப நாம் பலமடைகிறோம்.

இந்த கொள்கையை வெகு தூரத்திற்கு எடுத்துச் செல்வதே நமது கிறிஸ்தவ விஞ்ஞான நண்பர்கள் செய்கிற தவறாக இருக்கிறது. நாம் நலமாக இருக்கிறோம் என்று நினைப்பது நம்மை அப்படியாக ஆக்குவதில்லை. காரியத்தைக் குறித்து பொய் சொல்லுவது சரியல்ல. நமக்கு வலியும் நோவும் இருக்கும் போது அதை இல்லை என்று சொல்வது சரியல்ல. வேதாகமம் ஊக்குவிப்பது மத்திய கருத்தாக இருக்கிறது. வலியும் நோவும் இல்லை என்று சொல்லாதிருப்பது, மரணம் என்பது “மனித தவறு” என்று சொல்லாதிருப்பது மற்றும் மரணம் என்பது இல்லை என்று சொல்லாதிருப்பது வேதாகம கருத்தாக இருக்கிறது. ஆனால் நாம் மரண செயல்பாடுகளுடன் உதவி செய்யலாம். அல்லது அதிகமான உதவி செய்யும் எண்ணங்களை வளர்க்க நாம் நாடலாம். இப்படியாக நமக்கும் மற்றவர்களுக்கும் ஒரு உதவிகரமான செல்வாக்கை அப்பியாசப்படுத்தலாம்.

இந்தக் கொள்கை வியாதியஸ்தர் அறையில் செயலில் இருப்பதை ஒருவர் கவனிக்கிறார். சில ஜனங்கள் வியாதியஸ்தர் அறைக்குச் சென்று தங்களது இரக்கத்தை மிகவும் அதிகமாக வெளிப்படுத்துவார்கள். இப்படியாக வியாதியஸ்தர், தான் உண்மையாக இருப்பதைக் காட்டிலும் மிகவும் மோசமான நிலையில் இருப்பதாக உணரும்படி செய்வார்கள். ஆகையால் அவர்கள் உற்சாகம் மூட்டும் வார்த்தைகள் மூலம் சுகவீனமுற்றவருக்கு உதவ வேண்டும். வியாதியஸ்தரிடம், “நீங்கள் மிகவும் மோசமாக காணப்படுகிறீர்கள்” என்று சொல்ல வேண்டிய அவசியமில்லை. “இந்த காலை வேளையில் கொஞ்சம் முன்னேற்றத்தை உணருகிறீரா? நன்றாக தூங்கினீர்களா?” என்று கேட்கலாம். அநேக ஜனங்கள் அவர்கள் எவ்வளவு ஓய்வு எடுக்க வேண்டும் என்பதையும் நன்றியை உணராதவர்களாகவும் இருக்கிறார்கள். ஆகையால் நாம் கூறுகிற யோசனையாவது: “கர்த்தரிடம் நீங்கள் நன்றியை உணருகிறவர்களாக இருக்கிறீர்கள் என்றும், இந்த அழகான நாளுக்காக நீங்கள் சந்தோஷப்படுகிறீர்கள் என்றும் நான் நம்புகிறேன். உங்கள் அறையில் எப்படி சூரியன் பிரகாசிக்கிறது பாருங்கள்! பறவைகள் பாடுவதைக் கேளுங்கள்!” சிலர் வியாதிப்பட்டிருக்கும் போது அவர்களது

நிலைமை, "பேசமுடியாமல் முனுகுகிற அளவுக்கு" இருக்கும். வியாதியுள்ளவர்கள் அறைக்குள்ளே யாராவது சூரிய ஒளியை கொண்டு வரவேண்டும் என்று விரும்புகிறார்கள்.

ஆகையால் பிரியமான நண்பர்களே, பழைய வாழ்க்கைக்கும் பழைய குறிக்கோள்களுக்கும் பழைய காரியங்களுக்கும் நாம் மரித்துவிட்டோம் என்று நாம் கர்த்தரிடம் உடன்படிக்கை செய்திருப்பதால் இவை எல்லாவற்றையும் நாம் விட்டுவிட வேண்டும் என்பதை நாம் தீர்மானிப்போமாக. கர்த்தர் விரும்புகிற பிரகாரம் நாம் சிந்திக்கவும், அவர் விரும்புகிற பிரகாரம் வாழ்க்கையின் காரியங்களை நோக்கவும், அவரது வசனத்தில் நமக்காக வைக்கப்பட்டுள்ள குறிக்கோள்களினால் நாம் செல்வாக்கு பெறவும் நாம் விரும்ப வேண்டும். இப்படி செய்து நாம் புது சிருஷ்டியாக கர்த்தரின் குணலட்சண சாயலில் வளர வேண்டும்.

**R5249**

## "Let your moderation be known"

# "உங்கள் சாந்தகுணம் எல்லா மனுஷருக்கும் தெரிந்திருப்பதாக"

பிலிப்பியர் 4:5

"உங்கள் சாந்த குணம் எல்லா மனுஷருக்கும் தெரிந்திருப்பதாக. கர்த்தர் சமீபமாக இருக்கிறார்" என்று பரிசுத்த பவுல் அறிவுறுத்துகிறார். இந்த அறிவுரையின் பிற்பகுதி இந்த சுவிசேஷ யுகத்தின் முடிவையும் புதிய யுகத்தின் ஆரம்பத்தையும் விசேஷமாக குறிக்கிறது. அவரது வார்த்தைகள் நமக்கு பொருந்தக்கூடியதாக, ஆம் அனைத்து மனுக்குலத்திற்கும் பொருந்தக்கூடியதாக இருக்கிறது!

முந்தைய காலத்தில் இந்த காலத்தைப் போல சாந்த குணத்தைப் பற்றிய இந்த ஆலோசனை தேவைப்பட்டிருக்கவில்லை! இந்த நடத்தை சில மயிர்க்கூச்செரியும், உணர்ச்சியூட்டும் சக்தியினால் பலப்பட்டதாக காணப்படுகிறது. நல்ல ஜனங்கள், ஞானவான்கள், சிந்திக்கக்கூடியவர்கள் மிகவும் அபத்தமான யோசனைகளாலும், முட்டாள்தனமான காரியங்களாலும் சுலபமாக உணர்ச்சி வசப்பட்டு, தங்களது சமநிலையை இழக்கிறவர்களாக காணப்படுகிறார்கள். நம்மில் யாராவது இப்படிப்பட்ட நிலைமையில் நாம் இருப்பதாகக் காண்போமானால், நமது இருதயத்தை பலப்படுத்தி, ஸ்திரப்படுத்தி, நிலை -நிறுத்தும்படியும் தேவனுடைய சித்தத்தின்படி வாழவும் பரமஞானத்திற்காக ஜெபம் ஏறெடுக்கப்பட வேண்டும்.

தேவனுடைய வசனத்தைக் குறித்த மனம் போன போக்கான விளக்கத்தினால் உண்டான மனஎழுச்சி, நமக்கும், நமது செல்வாக்கை பெற்றிருக்கிறவர்களுக்கும் தீமை விளைவிக்கும். அறிவீனமான விளக்கம், சஞ்சிகை பற்றியோ, அதன் ஆசிரியரைப் பற்றியோ, அறுவடை ஊழியத்தின் பொதுவான அக்கறை குறித்தோ அல்லது மற்ற காரியங்கள் மற்றும் மனிதர்களைப் பற்றியோ இருந்தாலும், அந்த தவறான விளக்கம் அளிக்கிறவரை தீமையாக உற்சாகமூட்டும்.

அரசியல்வாதிகள், சமூகவாதிகள், அராஜகவாதிகள் மற்றும் பலர் தங்களைப் பற்றியும் உலகத்தை பற்றியும் எதிர்காலத்தை முன்கணிப்பு செய்ய முயற்சித்து, அவர்களது நிலைகளை இழப்பதும், நேர்மையின்றி பேசுவதும் தவிர்க்க இயலாதது. மாறாக, தேவனுடைய பிள்ளைகள் எல்லா காரியங்களிலும் மிகவும் சாந்தமாக இருக்க வேண்டும். முதலாவது அவர்கள் தங்களது சிறுமையையும் இயலாமையையும், தேவனுடைய மேன்மையையும் திறமையையும் அங்கீகரிக்க வேண்டும். இரண்டாவதாக, சபைக்குரிய சகல காரியங்களையும், நன்மைகளையும் உலகத்திற்கானவைகளையும் கூட தேவன் கட்டளையிடுகிறார் என்பதை ஞாபகத்தில் வைக்க வேண்டும். இன்னும் கூட, கிறிஸ்துவின் மணவாட்டியாக, அவரது தெரிந்துகொள்ளப்பட்ட சபையின் அங்கங்களாக அவரது தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்த் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கு சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறது என்பதையும் ஞாபகத்தில் வைக்க வேண்டும். (ரோமர் 8:28-30)

தான் சிறியவன் என்றும், தேவனுடைய மேன்மையை ஏற்றுக்கொண்ட மனசாட்சி நம்மை தாழ்மையுடையவராக வைத்து, அனைத்து பெருமை, துடுக்குத்தனம், "எல்லாம் தெரியும் என்ற எண்ணம்" ஆகியவற்றிலிருந்து நம்மை தடுக்கிறது. தேவன் தம்முடைய கிருபையுள்ள நோக்கங்களை நாம் அறியும்படி செய்வதற்காக நாம் நன்றியுள்ளவர்களாகவும் பாராட்டுகிறவர்களாகவும் இருக்க வேண்டும். தேவன் இன்னும் திறக்காத அவரது திட்டங்களின் அம்சங்களை மூர்க்கமாக உடைக்கும்படி முயற்சி செய்வதையும், கர்த்தருக்கு முன் ஓடுகிற ஒவ்வொரு முயற்சியையும் நாம் கண்டிப்பாக தவிர்க்க வேண்டும். தேவனுடைய குறித்த காலத்திற்கு முன்னதாக நாம் பெறுகிற எந்த அறிவும் நமக்கு தீங்கு விளைவிக்கக் கூடியதாக இருக்கும் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். உதாரணத்திற்கு தாய் ஏவாள் நன்மையை முன்கூட்டியே அறிந்திருந்து, தெய்வீக ஒழுங்கை அடைவதற்கு முன்னதாகவே கீழ்ப்படியாமையினால் தீமையின் அறிவைப் பெற்றாள். இப்படியாக பெற்ற அந்த அறிவு தீங்காயிற்று.

### விவாதம் பண்ணுகிற எதையும் தவிர்க்கவும்

காவற்கோபுர வாசகர்கள், எதிர்காலத்தைப் பற்றி முன்கணிக்கும் அவர்களது காலக்கணக்கையும் உள்ளடக்கிய அவர்களது விசுவாசம் மற்றும் நடத்தை ஆகிய எல்லா காரியங்களிலும் சாந்த குணத்தை அப்பியாசப்படுத்த வேண்டும் என்று கேட்டுக் -கொள்கிறோம். இந்த வருடம் என்ன நடக்கும் அடுத்த வருடம் என்ன நடக்கும் முதலானவைகளை யூகிப்பதில் நமது மதிப்புமிக்க சக்தியையும் நேரத்தையும் வீணடிப்பது விவேகமான காரியமல்ல என்று நாங்கள் தீர்மானிக்கிறோம். அதற்கு மாறாக, நாம் பெற்றிருக்கிற அறிவை பயன்படுத்தி நம் கைக்கு நேரிடுகிறதை நமது முழு வல்லமையோடு செய்ய வேண்டும். சத்துருவானவன் நாம் முன்னரே அறிந்திருக்கிறவைகளிலிருந்தும் ஊழியம் செய்யும் சலுகைகளிலிருந்தும் நம்மை விலக்கவும், நாம் அறிந்திராத காரியங்களை யூகம் பண்ணவும் நம்மை கவரும்படி செய்வான். கர்த்தருடைய பிள்ளைகள் ஆர்வத்தை அடக்க வேண்டும் என்றும் தேவனுடைய வசனத்தில் தெளிவாக வைக்கப்படாத காரியங்களை துருவிப் பார்ப்பதை தவிர்க்க வேண்டும் என்றும் நாங்கள் அவர்களுக்கு அறிவுறுத்துகிறோம். அது அவர்களுக்கு தீமையாக இருக்கும். ஊழியம் செய்கிற ஆர்வம் உடைய நம் அனைவருக்கும் தீங்கிழைக்கக் கூடியதாக இருக்கும். நமது இருதயங்களிலும், நாம் யாருக்கு கர்த்தரின்

ஸ்தானாபதியாகவும் வாயாகவும் இருக்கிறோமோ அவர்களது இருதயங்களிலும் கிருபையின் வேலையை தடுக்கக்கூடிய வேலையை செய்யக்கூடியவர்களாக இருப்போம்.

அக்டோபர் 1914இல் புறஜாதியார் காலம் முடிவடைகிறது என்று நாம் புரிந்து கொண்டதைத் தவிர, நாம் எழுதியதில் எங்கேயும் இந்த யுகம் முடிவடைகிற வருஷங்களைக் குறித்து அவர்கள் காண முடியாது என்று நமது வாசகர்களை ஞாபகப்படுத்த இந்த சந்தர்ப்பத்தை நாங்கள் எடுத்துக்கொள்கிறோம். இந்த அக்டோபர் 1914ஐத் தொடர்ந்து, “யாதொரு ஜாதியாரும் தோன்றினது முதல் அக்காலமட்டும் உண்டாயிராத ஆபத்துக் காலத்தில்” இந்த பூமியின் ஆளுகை மகிமையின் மகா ராஜாவிடத்திற்கு மாற்றப்படும் தேதியை நாம் எதிர்பார்க்கிறோம். இதற்கு முன்பாக சபைக்கு ஒரு சோதனைக் காலம் – இந்த தீங்கு நாளிலே யார் நிலை நிற்கக்கூடும், யார் விழுந்து போவார்கள் என்ற கேள்வி எழுகிற காலம் – வரும் என்று நாங்கள் குறிப்பிட்டிருக்கிறோம். (எபேசியர் 6:13)

வேதகாம பாடங்களின் தொகுதி 3இல் மகா பிரமிட் குறித்து விவாதித்திருந்தோம். அதில் சில அளவுகளை பார்த்தபோது கம்பீரமான நீண்ட தாழ்வாரம் (Grand Gallery) மேலே முடிகிற புள்ளியின் அளவு 1910ஆம் ஆண்டின் முடிவை குறிப்பிட்டதாக இருந்தது. இந்த யுகத்தில் நாம் சரியான எதையும் கட்ட முடியவில்லை என்பதை தெளிவாக்கி விட்டோம் என்று நாம் நம்புகிறோம். அது ஒரு யூகம் மட்டுமே, ஒரு யோசனை மட்டுமே. 1911ஆம் வருடம் மிகவும் ஆவலாக எதிர்பார்க்கப்பட்டதாக இருந்தது. ஆனால் நாம் ஒவ்வொரு வருடமும் தற்போது மிகவும் ஆவல் உள்ளதாக இருக்கிறது என்று நமது வாசகர்களுக்கும் மற்றும் முழு நாகரீக உலகிற்கும் சொல்லிக்கொள்கிறோம். நிச்சயமாக,

“நாம் ஜீவிக்கிறோம், நாம் வாழ்கிறோம்,

ஒரு மாபெரும், மோசமான காலத்தில்;

யுகங்களின் ஒரு யுகத்தில் வாழ்வது,

மேன்மையானது என்று கூறுகிறது!”

1914ஆம் வருடத்தை பொருத்தவரை, நாம் அதை உண்மையிலேயே முக்கியப்படுத்தி கூறியிருக்கிறோம். அதைக் குறித்த நமது நம்பிக்கையையும் விசுவாசத்தையும் அடிக்கடி வெளிப்படுத்தியிருக்கிறோம். இந்த வருடத்தைக் குறித்து நாம் தெரிந்து, தவறான சொற்றொடர்களில் பேசவேயில்லை. இது முழுமையான அறிவு என்பதைக் காட்டிலும், இதை விசுவாசத்திற்குரிய, நம்பிக்கைக்குரிய காரியமாக எப்பொழும் ஏற்றுக் கொண்டிருக்கிறோம். காலக்கணக்கு அத்தியாயத்தை மறுபடியும் ஜாக்கிரதையாக சோதிக்க வரும்படி அழைக்கிறோம். இப்படியாக வாசிப்பது உதவிகரமாயும் நிதானத்தையும் நிரூபிக்கும். நமது அறிவு காலக்கணக்கை முழுவதுமாக அடிப்படையாகக் கொண்டிருந்தால் குறிப்பிட்ட தேதியிலிருந்து நாம் வெகு தூரத்தில் இருந்திருப்போம் என்பதையும் நமது விசுவாசம் பெரும்பாலும் பல்வேறு தீர்க்கதரிசனங்களை உறுதிப்படுத்துதல், ஒன்றொடொன்று இணைத்தல் மற்றும் பிணைத்தல் ஆகியவைகளின் அடிப்படையில் இருக்கிறது என்பதையும் சுட்டிகாட்டுகிறோம். இந்த தீர்க்கதரிசனங்கள் வேதாகம காலக்கணக்கிற்கு நம்பகத் தன்மையை நிரூபிப்பதாகவும், இந்த தேதியைக் குறித்த தொடர்பில் நமக்கு பயனுள்ளதாகவும் காணப்படுகிறது.

**“இவைகளையே சிந்தித்துக் கொண்டிரு”**

இந்த தேதியையும் அதனுடன் சேர்ந்த நம்பிக்கைகளையும் அலட்சிப்படுத்துவதற்கான காரணத்தை நாங்கள் காணவில்லை. இந்த வேலையின் மகா காரியங்கள் நிறைவேற இன்னும் ஒன்றரை ஆண்டுகள் மாத்திரமே இருந்தாலும், முற்காலங்களில் ஐந்து வருடங்களில் நிறைவேற்றப்பட்ட காரியங்கள் ஆச்சரியமான தற்காலத்தில் ஒரே வருடத்தில் நிறைவேற்றப்பட முடியும் என்பதை நாம் மறந்து விடக்கூடாது. மேலும் யுகங்களையும் பற்றிய தெய்வீக திட்டங்களை தொடர்புடைய காலங்கள் மற்றும் வேளைகளைப் பற்றிய அறிவு பயனுள்ளதாகவும் ஊக்கமளிப்பதாகவும், எழுச்சியூட்டுவதாகவும் இருக்கிறது என்று அறிவுறுத்துகிறோம். எனினும் அப்படிப்பட்ட அறிவு சுவிசேஷத்தைப் பற்றியதல்ல. காலக்கணக்கின் ஒவ்வொரு தேதியும், ஒவ்வொரு தீர்க்கதரிசனமும் அழிந்து போனாலும் நாம் கர்த்தரின் மகிமையான சுவிசேஷத்தில் இன்னும் நாம் களிகூர வேண்டும், சந்தோஷப்பட வேண்டும். இந்த சுவிசேஷம் கிறிஸ்துவையும் அவரது பலியையும் மையமாகவும் பூமியின் சகல வம்சங்களையும் ஆசீர்வதிக்கிறதில், நாம் அவரோடும், அவரது அங்கங்களோடும் பங்குபெறுகிற நமது வாக்குத்தத்தத்தை சுற்றளவாகவும் அமைக்கிறது.

சபையானது பூர்த்தியடைவது 1914க்கு முன் நிறைவேறினாலும் நிறைவேறாவிட்டாலும், இது கிறிஸ்துவுக்குள்ளான தேவனுடைய கிருபையின் நல்ல செய்தியாக இருக்கிறது. தேவனுடைய கிருபையின் செய்தியை நாம் போதிப்போமாக; தீர்க்கதரிசனங்களின் மூலமாக வருகிற தேவனுடைய கிருபையின் செய்தியினால் நமது இருதயங்கள் ஊக்கமூட்டப்படட்டும். ஏனெனில் ஆசீர்வாதம் மிகவும் சமீபமாயிருக்கிறது. நமது சாந்த குணம் வெளிப்படுத்தப்பட்டும். நம்மை வார்த்தையிலும் செய்கையிலும் சிந்தையிலும் சாந்தகுணமுள்ளவர்களாகவும், தாழ்மையுள்ளவர்களாவும் நம்மை வைத்துக் கொள்ளுவதற்கு நாம் கொஞ்சமாக அறிந்திருப்பதும், கொஞ்சமாக புரிந்துகொண்டிருப்பதுமே உதவி செய்கிறது. இப்படியாக நாம் ஆண்டவருக்காகவும் அவர் நிமித்தமும் நல்ல ஊழியம் செய்வோம்; அவரது வசனத்தின் போதனைகளுக்கு அதிக இணக்கமாக இருப்போமாக.

மகா ஆபத்தின் காலம் மகா எதிராளியாகிய சாத்தான் மற்றும் அவனது விழுந்து போன தூதர்களினால் உலகத்தின் மேல் வரும் என்பது எங்கள் நம்பிக்கையாக இருக்கிறது. ஹிப்னாட்டிசம் முதலியவற்றால் மனித சித்தத்தை உடைக்கும் வேலைக்கும், அஞ்ஞானத்திற்கும், வேட்கைக்கும் அவர்களை அனுப்புவதற்கு வல்லமையானது மனுக்குலத்தின் மேல் அப்பியாசப்படுத்துதல் சீக்கிரத்தில், படிப்படியாக பெருகும் முறைக்கும் ரூபகாரங்கள் பெருகுவதைக் காண்பதில் நமக்கு ஆச்சரியம் ஏதுமில்லை. சாந்த குண சிந்தையின் வழியில் தேவனுடைய வசனத்தை கற்றுக் கொண்ட இப்படிப்பட்ட அவருடைய பிள்ளைகள், கர்த்தருக்குள் இளைப்பாறி அவரது நேரத்திற்காகவும் வழிக்காகவும் அமைதியாக காத்திருக்கிறார்கள்; அனுதின கட்டுப்பாடு மற்றும் சுய சோதனைக்கு பிரதிக்கினை மூலமாக உதவப்படுகிறார்கள்; இதன்மூலம் இவர்கள் சத்துருவானவனின் கண்ணியிலிருந்தும், பூமியில் குடியிருக்கிறவர்களை சோதிக்கும்படியாக பூச்சக்கரத்தின் மேல் வரப்போகிற சோதனைகளிலிருந்தும் தப்புவித்து காக்கப்பட்டு, அதிகமாக ஆசீர்வதிக்கப்படுவார்கள். (வெளிப்படுத்துதல் 3:10)

**R5250**

## Moses the Good Child

# அழகான குழந்தை மோசே

யாத்திராகமம் 1:22-2:10

"இப்படிப்பட்ட ஒரு பிள்ளையை என் நாமத்தினிமித்தம் ஏற்றுக்கொள்ளுகிறவன் என்னை ஏற்றுக்கொள்ளுகிறான்." - மத்தேயு 18:5

யோசேப்பு எகிப்தின் முதன்மை மந்திரியாக எண்பது வருடம் இருந்து, தனது நூற்றுப்பத்தாம் வயதில் மரித்தார். அந்த காலத்தில் நிச்சயமாக அவரது சகோதரர்கள், இஸ்ரயேலர்கள் கொடுமையை அனுபவத்திருக்க மாட்டார்கள். அதன்பிறகு "யோசேப்பை அறியாத" இன்னொரு பார்வோன் ஆட்சிக்கு வந்தான். அவன் யோசேப்பு எகிப்துக்கு செய்த சேவைகளையும் இஸ்ரயேலரோடு செய்திருந்த உடன்படிக்கையையும் புறக்கணித்தான். இந்த பார்வோன், ராமசேஸ் II ஐப் பெற்றிருந்த கடின இருதயமுள்ள கொடுங்கோலனாக இருந்தான்.

இந்த பார்வோன், எகிப்தியர்களைக் காட்டிலும் இஸ்ரயேலர்கள் மிகவும் பெருகிக் கொண்டிருந்ததை தெரிந்துகொண்டான். ஆகையால் அவன் அவர்களை அபாயகரமானவர்களாக கருதினான். முதலில் அவர்கள் எகிப்துக்கு பாதுகாப்பானவர்களாக கருதப்பட்டார்கள். ஏனெனில் கோசேன்தேசம் எகிப்துக்கு கிழக்கு பக்கமாக இருந்தது. ஒரு எதிரி எகிப்துக்கு விரோதமாக சண்டையிட வந்தால், முதலில் இஸ்ரயேலரோடு போரிட வேண்டும். அந்த நாட்களில் எகிப்தியருக்கு ஒரே எதிரி அசீரியர்கள் தான். ஜனத்தொகையில் இஸ்ரயேலர்கள் பெருகினதினால் ஒரு புதிய ஆபத்து அச்சுறுத்தியது. ஏனெனில் படையெடுக்கிற இராணுவம் இஸ்ரயேலருக்கு லஞ்சம் கொடுத்து இதன் மூலம் பார்வோனின் ஆளுகை கவிழ்த்து விடப்படலாம்.

இந்த சம்பவத்தை தடுக்கும் வண்ணமாக பல்வேறு யுக்திகள் முயற்சிக்கப்பட்டன. முதலாவது இஸ்ரயேலர்கள் கடினமான வேலைகளை செய்யும்படி கட்டளையிடப் -பட்டார்கள். அது அவர்களது பலத்தை குறைத்து பலவீனப்படுத்தும் என்று எதிர்பார்க்கப்பட்டது. எனினும் மாறாக, சுமைகள் அதிகம் சேர்க்கப்பட்டாலும் செழிப்பு அதிகமாகிக் கொண்டிருந்ததாக காணப்பட்டார்கள். அடுத்த அடக்கு முறை, இஸ்ரயேலருக்கு பிறக்கும் ஒவ்வொரு ஆண் குழந்தையும் கழுத்தை நெறித்து கொல்லப்பட வேண்டும் என்று மருத்துவச்சிகளுக்கு கட்டளை இடப்பட்டது. ஆனால் இந்த கட்டளையும் தோல்வியடைந்தது. ஏனெனில் மருத்துவச்சிகள் வரும்முன்னே, குழந்தைகள் பிறந்து விடுகின்றன என்று மருத்துவச்சிகளால் சொல்லப்பட்டன. கடைசியாக இஸ்ரயேலருக்கு பிறக்கும் ஆண் குழந்தைகள் அனைத்தும் தண்ணீர் முழ்கடிக்கப்பட வேண்டும் என்று ராஜ கட்டளை கொடுக்கப்பட்டது. இதைச் செய்யத் தவறினால் அது தண்டிக்கப்படக் கூடிய குற்றமாக செய்யப்பட்டது.

இந்த நிலமையில்தான் மோசே பிறந்தார். அவரது பெற்றோர்கள் தேவ பக்தியுள்ளவர்களாக இருந்தார்கள் என்று வேதாகம பதிவு கூறுகிறது. ஆகையால், "குழந்தை அழகுள்ளதாக இருந்தது" என்ற கூற்றில் நமக்கு ஆச்சரியம் ஏதுமில்லை. அம்சம் மற்றும் குணலட்சனத்தில் அழகான பிள்ளைகளாக இல்லாதிருப்பதற்கு தாங்களே காரணம் என்பதை சில பெற்றோர்கள் மட்டுமே உணருவதாக தெரிகிறது. இதன் மூலம் எந்த ஒரு மனித ஜோடியும் பரிபூரண குழந்தைகளை பிறப்பிக்க முடியும் என்று நாங்கள் சொல்லுவதாக அர்த்தமாகாது. "அசுத்தமானதிலிருந்து சுத்தமானதை பிறப்பிக்கத்தக்கவன் உண்டோ?" (யோபு 14:4)

ஜாக்கிரதையான இனப்பெருக்க முறைமை, தாழ்ந்த விலங்குகளின் அம்சங்கள், உருவம் மற்றும் குணலட்சணத்தில் தாக்கத்தை ஏற்படுத்த முடியும் என்று நாங்கள் அர்த்தப்படுத்துகிறோம். பழங்கள் மற்றும் மலர்களை நாம் உயர்ந்தவைகளை பிறப்பிக்க முடியும். மனுக்குலத்திலும் இது சக்தி வாய்ந்ததாக இருக்கிறது. ஆம், இன்னும் அதிகமாக முடியும். பெற்றோரோ அல்லது நாடோ, மனித திருமணத்தில், துணையை தேர்ந்தெடுப்பதில் பொருட்படுத்தாதிருக்கிறார்கள். எனினும் திருமணமானவர்கள், உலகத்தில் மிகவும் ஆச்சரியமான சக்தியை, குழந்தைகள் பிறப்பதற்கு முன்பே, அவர்களது குணத்திற்கும் உருவத்திற்குமான செல்வாக்கை தங்கள் சொந்த காட்டுப்பாட்டில் வைத்திருக்கிறார்கள். அவர்களது பிறப்பிற்கும் பிறகும் கூட மனவல்லமை புறக்கணிக்கப்படக் கூடாது.

எப்படிப்பட்ட ஒரு மாற்றத்தை விரைவில் ஏற்படுத்தலாம் என்பதை, இந்த இயற்கையின் சட்டத்தை, அறிவுள்ள, மனசாட்சியுள்ளவர்கள் தெளிவாக உணர்ந்திருக்கிறார்கள்! இப்படிப்பட்ட பெற்றோர்கள், உருவத்திலும், அம்சங்களிலும் குணத்திலும் நல்ல குழந்தைகள் உலகத்திற்கு கொண்டு வருவதை விரும்புவதோடு கூட, இந்த காரியங்களில் தங்களால் அதிகபட்சமான முடிந்ததை செய்யாதிருப்பது ஒரு குற்றமாக கருத வேண்டும் என்று நாங்கள் நினைக்கிறோம்.

ஒவ்வொரு தாயும் தனது கர்ப்ப காலத்தில் தனது மன நிலைமை தனது குழந்தையை ஆசீர்வதிக்கும் அல்லது சபிக்கும் என்பதை உணர்ந்திருந்தால், கெட்ட சிந்தைகளை மற்றும் தந்திரங்களை எந்த அளவுக்கு தொடர்ந்து எதிர்ப்பாள்? எந்த அளவுக்கு தனது வாசித்தல், தோழமை மற்றும் மன பிரதிபலிப்பை ஜாக்கிரதையாக பாதுகாப்பாள்! கற்புள்ளவைகள் எவைகளோ, நீதியுள்ளவைகள் எவைகளோ, உண்மையுள்ளவைகள் எவைகளோ, மேன்மையுள்ளவைகளெவைகளோ, கனத்துக்குரிய -வைகளையும் அழகானவைகளையும் சிந்தித்துக் கொண்டிருங்கள் என்று கூறுகிற அப்போஸ்தலரின் அறிவுரையை எவ்வளவு உண்மையுடன் செய்து முடிப்பாள்! இப்படியாக தன்னால் முடிந்த அளவுக்கு உயர்ந்த மேன்மையான குழந்தையை பிறப்பிக்க முயற்சிப்பாள்!

மேலும் தகப்பனானவன் தனது பொறுப்பை உணர்ந்திருந்தால் அவனது கடமையை செய்ய எவ்வளவு ஜாக்கிரதையாக இருப்பான்! ஒரு தகப்பனாக ஜீவனை கொடுப்பவனாக மாத்திரமில்லாமல், தாய்க்கு பாதுகாவலனாக பொறுப்பாளனாக தன்னால் முடிந்தவரை அவளுக்கு தேவையான அதிக பட்ச உதவியையும் அன்பையும் ஆதரவையும் கொடுப்பான். கர்ப்ப காலத்தில் தாயானவள் நல்ல, பெரிய, மேன்மையான பரிசுத்தமுள்ள, அறிவுள்ள, பண்புள்ளவைகளினால் சூழப்பட்டிருப்பாள். அவன் விசேஷித்தவிதமாக தயையுள்ளவனாக இருப்பான்; தாயின் மனதை சந்தோஷமாக இருக்கும்படி முயற்சிப்பான். படங்கள், கலைத்தன்மையுடையவைகள் போன்றவைகளை அவள் பார்க்கும்படி வைக்க வசதியில்லாவிட்டாலும், மேன்மையான உயர்ந்த கருத்துள்ள படங்கள், எழுத்துக்களை அவள் படிக்கும்படி

செய்வான். நாகரீகமடைந்த ஜனங்கள், தங்களது ஓட்டப் பந்தய குதிரைகள், நாய்கள், புறாக்கள் மற்றும் பன்றிகள் ஆகியவைகளை உயர்ந்த இனப்பெருக்க முறைமைகளை அப்பியாசப்படுத்தும் போது, அவர்கள் தங்கள் சொந்த குடும்பத்தில் இன்னும் வெற்றிகரமாக அப்பியாசப்படுத்துவார்கள். ஆச்சரியமான பலனை யார் சந்தேகப்படக்கூடும்?

யூத சரித்திர ஆசிரியர் கூறும் போது, குழந்தை மோசே தண்ணீரிலே மிதந்து செல்வதை பார்த்தவர்கள், தங்கள் வேலையையும் மறந்து நின்று குழந்தையையே பார்த்துக் கொண்டிருந்ததாக பதிவு செய்திருக்கிறார். மனித அம்சங்கள், உருவங்கள், குணலட்சணங்கள் உலகம் முழுவதிலும் பெருமையானதாக இருக்க, பூரணமாயிருக்க காலம் நெருங்குகிறது. கண்காட்சிகளில் முதல் பரிசுகள் பெறுகிற மலர்கள், பழங்கள் மற்றும் வாயில்லாத பிராணிகள் இவைகளின் சொந்தக்காரர்கள் கனப்படுத்தப்படுகிறார்கள். மோசேயின் பெற்றோர்களை பழைய ஏற்பாட்டில் மேன்மைப்படுத்தி கூறியிருப்பதில் ஆச்சரியம் ஏதுமில்லை. புதிய ஏற்பாட்டிலும், அவர்கள் விசுவாசிகளாக இருந்தார்கள் என்றும், விசுவாசத்தினால், “மேன்மையான உயிர்த்தெழுதலை” அடைகிற பழங்கால பாத்திரவான்கள் பட்டியலில் அவர்களும் இருக்கிறார்கள் என்றும் நாம் தெளிவாக சொல்லப்பட்டிருக்கிறோம். (எபிரேயர் 11:23)

## தேவனுடைய பராமரிப்புக்கு ஒத்துழைத்தல்

மோசேயின் பெற்றோர்கள் மோசேயின் உயிரைக் காப்பாற்ற என்ன செய்வது என்பது குறித்து முன்கூட்டியே சிந்தித்தார்கள். எகிப்திய இளவரசி, அவளுக்கென்று ஒதுக்கப்பட்ட இடத்தில் நைல் நதியில் குளிக்க வருவதை அறிந்திருந்தார்கள். அது மத சம்பிரதாயத்தின் ஒரு பகுதியாக கருதப்பட்டது. ஒரு அழகான ஆண் குழந்தை அவளை விசேஷித்த விதமாக கவரும் என்று கருதினார்கள். பாரம்பரியமாக கூறப்படுவது போல, அவர்கள் செய்தது போல செய்யச் சொல்லி கனவு மூலம் சொல்லப்பட்டிருக்கலாம். எனினும் பெற்றோர்கள், தெய்வீக பாரமரிப்புடன் ஒத்துழைத்ததின் மூலம் இந்த பலன் கிடைத்தது என்று நாங்கள் உணருகிறோம்.

நைல் நதிக்கரையில் அதிகமாக வளரக் கூடிய நாணலினால் ஒரு சிறிய கூடையை செய்து, அதில் தண்ணீர் புகாமல் இருக்க அதற்கு பிசினும் கீலும் பூசி, குழந்தையை அதிலே வைத்து, இளவரசி வரக்கூடிய நேரத்தில் அந்த இடத்திற்கு அருகே நாணலில் வைத்தார்கள். அந்த குழந்தைக்கு என்ன சம்பவிக்கும் என்பதை அறியவும், தேவைப்பட்டால் ஒரு தாதியை அழைத்து வரவும் மோசேயின் தமக்கை மிரியாம், எட்டு வயது சிறுமி அங்கே நின்று கொண்டிருந்தாள். அதே போலவே நடந்தது; குழந்தையின் தாயே அதை வளர்க்கிறவளானாள்; இளவரசி அந்த குழந்தைக்கு ஆதரவாளராகவும் பொறுப்பானவராகவும் ஆனாள்.

இப்படியாக தேவனுடைய பராமரிப்பினால், ராஜாவின் எதிர்ப்பு இருந்தும் அதிசயமான மோசே ராஜ அரண்மனையில் வளர்க்கப்பட்டான். எகிப்திய பள்ளிகளில் மோசே எகிப்தியருடைய சகல சாஸ்திரங்களிலும் கற்பிக்கப்பட்டான். இப்படியாக தேவனுடைய பராமரிப்பினால் இஸ்ரயேலில் தலைவராக அவரது மாபெரும் வேலையை செய்தவற்கான தகுதியுள்ள மனுஷன் ஆயத்தப்படுத்தப்பட்டான். மேலும், தேவனுடைய ஜனங்களாகவும், வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட மெய்யான தேசத்திற்கு அவரால் வழி நடத்தப்படவும், விருப்பமுள்ள சகல மனுக்குலத்தையும் ஏற்ற காலத்தில் மீட்கிற மேசியாவுக்கு முன்னடையாளமானராகவும் மோசே உருவானார்.

## உதவி செய்யப்பட்டு பாதுகாக்கப்பட்டார்

இந்த கதை எவ்வளவு சாதாரணமானதாகவும் ஆனால் ஆச்சரியமானதாகவும் இருக்கிறது! இந்த காரியத்தில் தெய்வீக பராமரிப்பு, வழிநடத்துதல் எப்படி இருந்தது என்பதை நினைத்துப் பாருங்கள்! ஒரு நாள் குழந்தை மோசே அவனது பெற்றோர்களின் இல்லத்தில் ஒரு ஆபத்தாகவும், அச்சுறுத்தலாகவும் இருந்து, எந்த சமயத்திலும் அந்த குழந்தை இருப்பது எகிப்திய அதிகாரிகளால் கண்டுபிடிக்கக் கூடிய நிலையில் இருந்தது. அப்படி கண்டு பிடிக்கப்பட்டால் குழந்தை கொல்லப்படுவதோடு, குடும்பம் உடைந்து, ராஜ கட்டளையை மீறினதற்காக அவனது பெற்றோர்கள் கொல்லப்படலாம். அடுத்த நாள், தெய்வீக பராமரிப்பினால் அந்த குழந்தை அதே வீட்டிற்கே திரும்பியது. அதன் சொந்த தாயே அவனை வளர்க்க எகிப்திய ராஜகுமாரத்தியால் சம்பளத்துக்கு நியமிக்கப்பட்டாள். அது ஒவ்வொரு நாளும் ராஜ தயவினால் முழுவதுமாக காக்கப்பட்டது. எந்த வயதில் குழந்தை பால் மறக்கப்பண்ணப்பட்டது என்பதை நாம் அறியோம். ஆனால் அது நான்கு வயதாக இருக்கலாம் என்று நாம் யூகிக்கிறோம். சுவாரஸ்யமான இந்த குழந்தை சுவாரஸ்யமான இந்த வயதில் இளவரசியின் சொந்த மகனாக எண்ணப்பட்டது. மோசே என்று அவன் பெயரிடப்பட்டான். அதைக் குறித்து பேராசிரியர் சேய்ஸ் (Sayce) கூறுகிறதாவது: “‘மோசே’ என்ற எபிரேய வார்த்தையின் கிரேக்கச் சொல், மோய்செஸ் (Moyses) என்ற கிரேக்க வார்த்தை என்று ஜோசபஸ் என்ற யுத சரித்திராசிரியர் பழங்கால எகிப்தியன் கோப்டிக் (Coptic) என்பவரிடமிருந்து, மோ (Mo) என்றால் தண்ணீர், யூசெஸ் (uses) என்றால் அதிலிருந்து காக்கப்பட்டவன் என்ற அர்த்தத்தை பெறுகிறார். வேறு வார்த்தைகளில் கூறுவோமானால், இளவரசி அதன் அர்த்தத்தை கூறும் வண்ணமாக, ‘இவன் என் மகன், இவனை தண்ணீரிலிருந்து எடுத்தேன் என்று சொல்லி மோசே என்று பெயரிட்டாள்.’” எப்பொழுது தேவனுடைய ஞானம் தெய்வீக திட்டத்திற்காக மனித காரியங்களில் ஊடுருவும் என்பதை நாம் அறியோம். அவர் தமது சித்தத்தின் ஆலோசனைக்குத் தக்கதாக எல்லாவற்றையும் நடப்பிக்கிறார் என்பதை தேவனுடைய ஜனங்கள் அவர்களது அனைத்து புரிந்துகொள்ளுதலிலும் எப்பொழுதும் ஞாபகத்தில் வைக்க வேண்டும். தேவன், மனிதனை ஒரு கருவியாக பயன்படுத்தும் போது, மனித சித்தத்தை மதித்து அதற்கு ஒத்துழைப்பு தருகிறார். அதிக வைராக்கியத்தோடு தேவனுக்கு ஒத்துழைப்பவர்கள், அதற்கேற்றாற் போல் அதிகமாக தெய்வீக ஆசீர்வாதத்தின் பங்கை பெறுகிறார்கள்.

தேவனுடைய பராமரிப்புகள் அவரது பரிசுத்த ஜனங்கள் மற்றும் அவர்களது குடும்பத்தாரை மட்டுமோ அல்லது பெயரளவுக்கு அவருடையவர்களாக இருக்கிறவர்களை மட்டுமோ பயன்படுத்தும் என்று நாம் புரிந்து கொள்ளக் கூடாது. இந்த பாடத்தில் தேவன் எப்படி, மனிதனின் கோபத்தையும் தம்மை புகழும்படி செய்கிறார் என்பதையும் தம்மை அறிந்திராதவர்களை, “இஸ்ரயேலின் காணியாட்சிக்கு புறம்பானவர்களையும் அந்நியராயும் இருந்தவர்களையும்,” யுகங்களைப் பற்றிய தமது மகா திட்டத்தையும் நிறைவேற்ற பயன்படுத்தினார் என்பதையும் நாம் காண்கிறோம். பார்வோன் ராஜாவின்

முழு குடும்பத்தினர் மற்றும் இளவரசியையும் தேவன் மோசேயை அவரது மாபெரும் வேலைக்கு தயார்படுத்தவும் அவரை பாதுகாக்கவும் கல்வி கொடுக்கவும் பயன்படுத்தினார். இந்த சிறிய பாடம் நல்ல நேர்மையான இருதயம் உள்ளவர்களால் நிச்சயமாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கும். தேவன் சபைக்கும் இஸ்ரேலுக்கும் உலகத்திற்கும் அளித்திருக்கும் சகல கிருபையான வாக்குத்தத்தங்களை நிறைவேற்ற அவரது ஞானம் மற்றும் வல்லமையில் மாபெரும் நம்பிக்கை வைக்கவும் அவரில் விசுவாசம் வைக்கவும் இந்த பாடம் நமக்கு நிச்சயமாக உதவுகிறது.

**R5251**

## God's Instrument in Preparation

## தயார்படுத்துதலில் தேவனுடைய கருவி

யாத்திராகமம் 2:11-25

''சாந்தகுணமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் பூமியை சுதந்தரித்துக்கொள்ளுவார்கள். '' - மத்தேயு 5:5

வேண்டுமென்றே செய்யப்பட்ட தெய்வச் செயல் நம்மை அடிக்கடி திகைப்படையச் செய்கிறது. நமது வாழ்நாள் மிகவும் குறுகியது. நமது வரையறை அதிகம். ஆகையால் நமக்கு ஏதாவது திட்டம் இருந்தால் அதை சீக்கிரம் முடிக்க முயற்சிக்க வேண்டும். ஆனால் "அநாதியாய் என்றென்றைக்கும் தேவனாயிருக்கிற" சர்வ வல்லவருக்கு அப்படியல்ல. அவருக்கு காலம் அபரிமிதமாக இருக்கிறது. அதற்கேற்றாற் போல் அவரது தீர்மானத்தை அவரது சித்தத்தின்படி செய்கிறார். அவர் ஆரம்பம் முதல் முடிவு வரை அறிந்தவராயிருக்கிறார் என்பதும், அவரது சொந்த சித்தத்தின் யோசனைப்படி அவர் அனைத்து காரியங்களையும் செய்கிறார் என்பதும் உறுதியானது என்பது அவரது ஜனங்களுக்கு ஒரு ஆறுதலாக இருக்கிறது. தெய்வீக சித்தம் எப்பொழுதும் நன்மையானதாக, நீதியானதாக, ஞானமானதாக மற்றும் அன்பானதாக இருக்கிறது என்பதை வேதமாணவர்கள் கற்றுக் கொண்டிருக்கிறதற்கு ஏற்றபடி அவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

"மோசே எகிப்தியருடைய சகல சாஸ்திரங்களிலும் கற்பிக்கப்பட்டான்" என்ற வேதவாக்கிய அறிக்கையில் மோசேயின் கல்வி குறித்து சுருக்கமாக சொல்லப் -பட்டுள்ளது. எகிப்திய புராணத்தின்படி அந்த காலத்திய தத்துவ சாஸ்திரங்களில் மோசே தேர்ந்தவனாக இருந்து ஒரு திறமையான எகிப்திய படைத் தலைவனாக இருந்தான். ஆனால் நாம் வேதாகம பதிவையே எடுத்துக் கொள்ள வேண்டும். எகிப்திலிருந்து இஸ்ரயேலர்களை ஆபிரகாமுக்கு வாக்குத்தத்தம் பண்ணின தேசத்திற்கு கொண்டு வருவதற்கான தேவனுடைய ஏற்ற காலம் நெருங்கியது. மோசேயைக் காட்டிலும் பெரியவர் இஸ்ரயேலர்களை இன்னும் ஆச்சரியமான விடுதலைக்கான காலம் இப்போது நெருங்கிக் கொண்டிருக்கிறது. (இந்த கட்டுரை 1915ல் எழுதப்பட்டது. இஸ்ரேல் தேசம் 1948 மே மாதம் சுதந்தரம் அடைந்து விட்டது)

மோசேயின் அனுபவங்களில் தேவனுடைய பராமரிப்புகள் இருந்தது கவனிக்கப்படத்தக்கது. இவரைப் பற்றி கர்த்தர் கூறினதாவது: "பூமியிலுள்ள சகல மனிதரிலும் மிகுந்த சாந்த குணமுள்ளவனா -யிருந்தான்." முக்கிய இடத்திற்கு ஒரு சாந்த குணமுள்ள மனிதனை தேவன் விரும்பினார். அந்த இடத்தில் மோசேயை தேவன் நிரப்ப நோக்கங்கொண்டார். மோசேக்கு கொடுக்கப்பட்ட அனுபவங்களும் பாடங்களும் அவர் சாந்த குணமுள்ளவராக ஆவதற்கு உதவின. அவர் கர்வமுள்ளவனும் திமிர் பிடித்தவனுமாயிருந்தால், அவரது ஜனங்களை தலைவராக எகிப்திலிருந்து கானானின் எல்லைக்கு அழைத்துச் செல்லக்கூடிய கடமைகளுக்கும் பொறுப்புகளுக்கும் அவரை தகுதியற்றவராக ஆக்கியிருக்கும். அந்த நாற்பது வருட மோசேயின் அனுபவத்தை குறிப்பிடுகிற மிகவும் கஷ்டமான வேலையை உலகில் யாரும் பெற்றிருக்க முடியாது. யாத்திரைக்கு முன்னான அவரது எண்பது வருட அனுபவங்கள் மட்டுமே கடுஞ்சோதனைக்கு அவரை தயார்படுத்தியது என்று நாம் நிச்சயப்படுத்தலாம்.

எகிப்தின் இளவரசியின் வளர்ப்பு மகன் மோசே நீதிமன்ற விருப்பமுடையவனாகவும், கர்வமும் திமிரும் உடையவனாகவும் இருக்கக்கூடிய ஆபத்தில் இருந்தார். ஆனால் இதற்கு மாறாக, மோசே யூதனுடைய அம்சங்கள் உடையவனாகவும் வெறுக்கப்பட்ட மற்றும் ஒடுக்கப்பட்டவர்களோடு சேர்ந்தவன் என்கிற அடையாளத்தை ஒவ்வொருவரும் அறிந்தவர்களாக இருந்தனர். இதனிமித்தம் இரண்டு மார்க்கங்களில் ஒன்றை எடுக்கக்கூடிய நிலையில் இருந்தார். ஒன்று எபிரேயர்களை புறக்கணித்து தன்னை இன்னும் அதிகமதிகமாக எகிப்தியர்களோடு ஐக்கியப்படுத்தி கொள்ள வேண்டும். அல்லது ஆபிரகாம், ஈசாக்கு மற்றும் யாக்கோபின் பிள்ளைகளுக்கான வாக்குத்தத்தத்தில் அதிகமதிகமாக விசுவாசம் உடையவராக ஆக வேண்டும்.

இது அவரது முதல் சோதனையாக இருந்தது. அவர் எதிர்காலத்தைக் குறித்த தெய்வீக வாக்குத்தத்தங்கள் மற்றும் தேவனிடம் தனது விசுவாசத்தை நிரூபிப்பாரா? பார்வோன் அவனது குடும்பம் மற்றும் அனைத்து எகிப்தியருடனான செல்வாக்கையும் இழந்து, அடிமைப்படுத்தப்பட்டு ஒடுக்கப்பட்ட ஜனங்களோடு தன்னை இணைத்துக்கொள்வதற்கு சமமான விசுவாசத்தை உடையவராக இருப்பாரா? மோசே இந்த காரியங்களில் ஜெயங்கொண்டவராக இருந்தார் என்று பரிசுத்த பவுல் குறிப்பிடுகிறார். மோசே ராஜ குடும்பத்தின் தத்தெடுக்கப்பட்ட அங்கமாக இருந்து அதன் கனத்தை, செல்வத்தை அனுபவிப்பதைக் காட்டிலும் தேவனுடைய பிள்ளைகளோடு பாடுபடுவதையே தெரிந்து கொண்டார். (எபிரேயர் 11:24-26) அவர் எகிப்தியர்களோட இணையும்படி தீர்மானம் செய்திருந்தால் அவர் ஆளுகிற பார்வோனாகக் கூட ஆகியிருக்கலாம்.

உலகின் சகல செல்வம் மற்றும் கனங்களைக் காட்டிலும் தேவனால் ஆபிரகாமிடம் செய்யப்பட்டு, ஈசாக்கு மற்றும் யாக்கோபோடு உறுதிப்பண்ணப்பட்டதும் இன்னும் நிறைவேறுதலுக்காக காத்துக்கொண்டிருக்கிறதுமான வாக்குத்தத்தத்தின் மேல் மோசே விருப்பம் உடையவராக இருந்தார். மோசே அவரது விசுவாசம் மற்றும் உண்மைத் தன்மையின் சோதனையில் நல்லவிதமாக நிலைத்து நின்றார். எந்த விதத்திலும் அவர் தேவனோடே இருந்தார்! இதேபோல மாம்சீக இஸ்ரயேலர்களுக்கும் ஆவிக்குரிய இஸ்ரயேலர்களுக்கும் எப்பொழுதும் சோதனைகள் உண்டு. இந்த சோதனைகள் தற்காலத்திற்கும் பொருந்தும். உலகமானது யூதர்களை தேவனுடனான உடன்படிக்கையின் உறவை விட்டுவிடும்படியும், அதே போல ஆவிக்குரிய இஸ்ரயேலர்களையும் தேவனுடனான ஆவிக்குரிய உறவை விட்டுவிடும்படியும் தொடர்ந்து தூண்டிக்கொண்டிருக்கிறது.

உலகத்துடனான நட்பு என்பது தேவனுடனான

பகைமை என்பதும், தேவனுடனான நட்பு என்பது உலகத்துடனான பகைமை என்பதும் இன்னும் உண்மையாக இருக்கிறது. ஆகையால் இருளின் இராஜ்யமானது, ஒளியின் இராஜ்யத்திற்கு எல்லா வகைகளிலும் வேறானதாகவும் எதிரானதாகவும் இருக்கிறது. இப்பொழுது "தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்" என்பது மோசேயின் நாட்களிலும் உண்மையாக இருந்தது. ஆனால் எப்பொழுதுமே இப்படி இருக்காது. ஒரு பெரிய மாற்றம் வரவிருக்கிறது. நீதியை சிநேகிக்கிறவர்கள் உயர்த்தப்பட்டு ஆசீர்வதிக்கப்படுவார்கள். பாவிகளோ அடக்கப்பட்டு தண்டிக்கப்படுவார்கள்.

## மோசே ஊக்கம் குறைந்து, மனமுடைந்தான்

தேவனுடைய வாக்குத்தத்தத்தை நம்பி, இஸ்ரயேலர்களை அவர்களது அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்க காலம் வந்திருந்ததாக மோசே விசுவாசித்தார். அவர் அதிசயத்தக்கவிதமாக பாதுகாக்கப்பட்டதை அவர் அறிந்திருந்தார். தேவன் அவர் செய்வதற்கென ஒரு விசேஷித்த வேலையை வைத்திருந்தார் என்பதை இது குறித்தது என்று தேவனுடைய வாக்குத்தத்தத்தின் நிச்சயத்தையும் அவர் பெற்றிருந்தார். அவர் அந்த வேலையை ஆரம்பிக்க தயாராகவும் ஆவலாகவும் இருந்தார். அவர் தான் தயாரற்ற நிலையில் இருந்ததை அறியவில்லை. தனக்கு நாற்பது வருஷத்திற்கான விசேஷித்த கல்வியைத் தவிர வேறு எந்த சிந்தையும் அவரிடத்தில் இல்லை. விடுதலைக்காக அடிக்க வேண்டிய நேரம் வந்துவிட்டது என்று நினைத்து விழிப்பாக இருந்தார். தன்னிடத்தில் நம்பிக்கை வைக்கும்படி ஜனங்களை ஊக்குவித்தார். அவர் பார்வோன் அரண்மனையில் கல்வி பயின்றிருந்திருந்தாலும், அவர்கள் மேல் அவர் பட்சமாயிருந்தார் என்பதையும் அவர்களது தலைவனாகவும் நம்பிக்கைக்குரியவனாகவும் இருக்கக்கூடியவர் என்பதையும் அவர்கள் அறிந்திருந்தார்கள்.

ஒரு எகிப்தியன் இஸ்ரயேலரில் ஒருவனை அநீதியாக அடித்ததை மோசே பார்த்தபோது, அவர் தனது சகோதரர்களுக்கான தனது வைராக்கியத்தை காண்பிக்கும் சந்தர்ப்பம் வந்தது. அந்த சச்சரவில் இவரும் ஈடுபட்டார். இந்த சண்டையில் எகிப்தியன் கொல்லப்பட்டான். இஸ்ரயேலன் மீட்கப்பட்டான். எகிப்தியன் யாரும் இதை பார்க்கவில்லை என்று நினைத்து மோசே இறந்தவனை மணலில் புதைத்துவிட்டார். அவரது சகோதரர்கள் அவரை தங்களது பாதுகாவலன் என்று நினைத்து அவரை அவர்களது தலைவனாக கருத நம்பிக்கை வரும் என்று அவர் நினைத்த போது, மோசே எகிப்திலிருந்து வெளியேறுவதற்கான கதவை தேவன் திறந்தார். மோசேயின் இந்த கனவுகள் எல்லாம் அடுத்த நாள் சிதைந்து போனது. மோசே எதிர்பார்த்ததை போல அவரது சகோதரர்களிடம் விசுவாசம் இல்லை என்பதையும், அவர்கள் தன்னை பின்பற்றுகிறவர்களாக இருப்பதற்கு பதிலாக, அவர் ஒரு இஸ்ரயேலனுக்கு உதவியதற்காக அவரை எகிப்திய அதிகாரிகளிடம் ஒப்படைக்க தயாராயிருந்தார்கள் என்பதையும் உணர்ந்து கொண்டார்.

மோசே முற்றிலுமாக ஊக்கம் குன்றி, தனது உயிருக்கு பயந்து மீதியான் வனாந்தரத்திற்கு ஓடினார். அவரது அனைத்து விசுவாசமும் நாற்பது வருட சகல கல்வியும் அபிவிருத்தியும் வீணாய் போனது போல காணப்பட்டது. அவர் கர்த்தருடைய சேனைக்கு தலைவனாக இருந்து அதை வழி நடத்துவதற்கு தான் தயார்படுத்தப்படுகிறோம் என்று நினைத்திருந்தார். ஒரு மணி நேரத்தில் அவரது நம்பிக்கையெல்லாம் அழிந்து, தனது முகத்தை அரண்மனையில் எகிப்தியர்களிடமோ அல்லது தனது சொந்த இனத்தாரிடமோ காண்பிக்க பயந்து தப்பி ஓடுகிறவரானார்; "ஒரு வீணான வாழ்க்கை" என்று கருதினார். நம்பிக்கைகள் மற்றும் குறிக்கோள்களை மனதில் வைத்து கழித்த நாற்பது ஆண்டுகள் வீணாய் போனது என்று கருதினார்.

## மோசே, எத்திரோவின் ஆடு மேய்ப்பவன்

தப்பியோடின மோசே ஒரு துரவண்டையில் உட்கார்ந்தான். மேய்ப்பர்கள் தங்கள் ஆடுகளை தண்ணீர் காட்ட அங்கே வந்தார்கள். வந்தவர்களில் எத்திரோவின் குமாரத்திகளும் இருந்தார்கள். மேய்ப்பர்கள் அவர்கள் தண்ணீர் காட்ட உதவிடாமல் தடை செய்தார்கள். மோசே நீதியின் சுபாவத்தினால் அவர்களது ஆடுகளுக்கு தண்ணீர் காட்ட உதவினார். பிறகு தற்செயலாக அவர்களோடே நடந்து அவர்களது வீட்டிற்கு சென்றார். எத்திரோ அந்நியனான மோசேயை அறியாதிருந்தும் அவரை பாராட்டுகிறவனானார்; எகிப்தியனைக் குறித்த அனைத்து காரியங்களையும் அறிந்தார். எகிப்தின் படைத்தளபதிகளில் ஒருவனாய் இருந்தவன் தற்போது அவமானம் அடைந்தவனாக, சாந்தமுள்ளவனாக, அடக்கமானவனாக போதிக்கப்படக் கூடியவனாக ஆனார்.

மோசே எத்திரோவின் மகள்களில் ஒருத்தியை திருமணம் செய்து கொண்டு, சாந்தமான ஆடு மேய்ப்பவனாக நாற்பது வருடங்களை கடந்தார். அந்த காலத்தில் தனது காரியத்தில் தேவனுடைய சித்தம் என்ன என்பதை புரியாதவராக இருந்து, சாந்தம் என்கிற முக்கியமான பாடத்தையும் தன்னை தேவனுடைய சித்தத்திற்கு சமர்ப்பித்தலையும் அந்த அனைத்து காலத்திலும் கற்றுக் கொண்டிருந்தார். பாடம் கற்றுக் கொள்ளப்பட்டிருந்தபோது ஒரு முக்கியமான இடத்திற்கு இரட்டிப்பாக போதிக்கப்பட்ட ஊழியக்காரனானார். இப்படிப்பட்ட அனுபவில்லாமல் இப்படிப்பட்ட ஊழியத்திற்கு மோசே தகுதியுள்ளவனாக ஆகியிருக்கவே முடியாது.

மோசேயுடனான தேவனுடைய இந்த செயல் தொடர்புகள், விசேஷித்த ஊழியங்களுக்காக, விசேஷித்த ஊழியர்களை தயார்படுத்துவதற்காக அவர்களுடன் கொண்டிருந்த தேவனுடைய செயல் தொடர்புகளின் பொதுவான கொள்கைகளை விளக்குகின்றன.. பரலோக மன்றத்தில் நமது கர்த்தராகிய இயேசுவின் சர்வ வல்லவருக்கான விசுவாசமும், நம்பகத்தன்மையும் சோதிக்கப்பட்டது. இன்னும் மென்மேலும் அவர் உயர்த்தப்பட, மனுக்குலத்தின் இரட்சராகும்படியும் இதன் மூலம் தெய்வீக திட்டங்களை நிறைவேற்றவும் சந்தர்ப்பம் கொடுக்கப்பட்டது. அவர் சந்தோஷத்துடன் அதற்கிசைவாக செயல்பட்டார். "அவர் குமாரனாயிருந்தும் பட்ட பாடுகளினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டார்." ( எபிரேயர் 5:8 ) பிதாவானவரின் சித்தத்துக்கு தம்மை முற்றிலுமாக "மரணபரியந்தம் அதாவது சிலுவையின் மரண பரியந்தமும்" அர்ப்பணித்து காண்பித்ததால், அவரது உயிர்த்தெழுதலில் தேவன் அவரை எல்லாவற்றிற்கும் மேலாக, முன்னிருந்ததை போல் அல்ல, இன்னும் மேலாக, "எல்லா துரைத்தனத்திற்கும், அதிகாரத்துக்கும், வல்லமைக்கும், கர்த்தத்துவத்துக்கும் இம்மையில் மாத்திரமல்ல, மறுமையிலும் பேர் பெற்றிருக்கும் எல்லா நாமத்திற்கும் மேலாக உயர்த்தினார்" என்று அப்போஸ்தலர் அறிவிக்கிறார். (பிலிப்பியர் 2:9-11; எபேசியர் 1:20-23; 1பேதுரு 3:22)

"உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும்" என்று தேவன் ஆபிரகாமுக்கு வாக்குத்தத்தம்பண்ணப்பட்டபடி, பூமியின் சகல

ஜாதிகளையும் ஆசீர்வதிக்கும் எதிர்கால மாபெரும் வேலையில் இயேசுவோடு இணையும்படியாக, ஒரு சிறு மந்தையை, ஒரு பரிசுத்த கூட்டத்தை இந்த பூமியிலிருந்து இந்த சுவிசேஷ யுகத்தில் தேவன் அழைத்துக் கொண்டிருக்கிறார். இந்த விசேஷித்த அழைப்பை ஏற்றுக் கொண்டவர்கள் தங்களது விசுவாசத்தை "துர்க்கீர்த்தி –யிலும், நற்கீர்த்தியிலும், எத்தரென்னப்பட்டாலும் நிஜஸ்தராக" தேவனிடத்தில் மெய்ப்பிக்க வேண்டும். சில சமயங்களில் இந்த பரிசுத்தவான்கள் பரிசுத்த பவுலைப் போல, "உலகத்தின் குப்பையைப் போலவும் எல்லாரும் துடைத்துப் போடுகிற அழுக்கைப் போலவும் எண்ணப்படுகிறார்கள்."(1கொரிந்தியர்4:13; 2கொரிந்தியர்6:8)

இந்த அவமதிப்புகள் பலவீனமான குருடாக்கப்பட்ட பாவ அடிமைகளிடமிருந்து அடிக்கடி வருகிறது. வேதாகமம் கூறுவது போல மற்ற சமயங்களில் "மனதார அறியாதவர்களிடமிருந்து" வரும். ஆனால் எனினும் இப்பொழுது தேவனால் ராஜரீக ஆசாரிய கூட்டமாகவும் மணவாட்டி வகுப்பாரின் அங்கங்களாகவும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிற தேவனுயை பிள்ளைகள் அனைவரும் தெய்வீக சித்தத்துக்கு ஒப்புக்கொடுக்கிறதிலும் அடக்கத்திலும் சோதிக்கப்பட வேண்டும். இந்த பாடத்தை கற்றுக்கொண்டு தேவனுடைய குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாகிறவர்கள் மாத்திரமே, (ரோமர் 8:29) "ஒளியிலுள்ள பரிசுத்தவான்களின் சுதந்தரத்தில் பங்கடைவார்கள்." தெரிந்துகொள்ளப்பட்ட சபைக்கும் அவருடைய விசுவாசிகளுக்கும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட கனம், மகிமை, சாகாமை மற்றும் தெய்வீக சுபாவத்தையும் பெறுவார்கள்.

**R5255**

## "Your Redemption Draweth Nigh"
## "உங்கள் மீட்பு சமீபமாயிருக்கிறது"

"என் ஜனமே, நீ போய் உன் அறைகளுக்குள்ளே பிரவேசித்து, உன் கதவுகளைப் பூட்டிக்கொண்டு, சினம் கடந்து போகும் மட்டும் கொஞ்ச நேரம் ஒளிந்துக்கொள். இதோ, பூமியினுடைய குடிகளின் அக்கிரமங்களினிமித்தம் அவர்களை விசாரிக்கும்படி கர்த்தர் தமது ஸ்தானத்திலிருந்து புறப்பட்டு வருவார்; பூமி தன் இரத்தப் பழிகளை வெளிப்படுத்தி தன்னிடத்தில் கொலை செய்யப்பட்டவர்களை இனி மூடாதிருக்கும்." ஏசாயா 26:20,21

சுவிசேஷ யுகத்தில் கடைசியில் வரக்கூடிய உபத்திரவங்களைக் குறித்து நமது ஆண்டவர் பேசும் போது கூறினதாவது: "ஆகையால் இனி சம்பவிக்கப் போகிற இவைகளுக்கெல்லாம் நீங்கள் தப்பி, மனுஷ குமாரனுக்கு முன்பாக நிற்கப் பாத்திரவான்களாக எண்ணப்படுவதற்கு, எப்பொழுதும் ஜெபம்பண்ணி விழித்திருங்கள்." (லூக்கா 21:36) மறுபடியும் (வசனம் 28) அவர் கூறினதாவது: "இவைகள் சம்பவிக்க தொடங்கும் போது, உங்கள் மீட்பு சமீபமாயிருப்பதால், நீங்கள் நிமிர்ந்து பார்த்து, உங்கள் தலைகளை உயர்த்துங்கள்." "என் ஜனமே, நீ போய் உன் அறைக்குள்ளே பிரவேசித்து, உன் கதவுகளை பூட்டிக்கொள்."

நாம் இரகசிய அறைக்குள் கடந்து செல்லும் போது, கர்த்தரிடத்திற்கு செல்லும் போது, எவ்வளவு உபத்திரவம் வருமோ, நாம் அறியோம். எனினும் இந்த உபத்திரம் வரும் போது, அதிலே கடந்து செல்லுபவர்கள் உபத்திரவத்தில் களிகூரும் அளவுக்கு கர்த்தரிடத்திலிருந்து ஆசீர்வாதம் இருக்கும். அவர்களது அனுபவம் எப்படிப்பட்டதாக இருந்தாலும், நாம் எப்பொழுதும் கர்த்தரோடு இருப்போம் என்ற எண்ணத்தில் இவர்கள் சந்தோஷமாக இருப்பார்கள். பரிசுத்த ஸ்தேவான் சந்தோஷமாக இருந்தது போல நாமும் சந்தோஷப்படலாம்.

### வேண்டுமென்றே செய்யப்பட்ட பாவங்களுக்கு தகுந்த தண்டனை

வசனம் 21, உலகத்தின் மேல் தேவனுடைய நியாயத்தீர்ப்பில் நீதியான கொள்கையின் நடவடிக்கைகளை குறிப்பதாக காணப்படுகிறது. பரலோக பிதாவானவர் நீதிக்காக நிற்கிறார். அவரது சகல இரக்கங்களும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலம் கையாளப்படும்படியாக அவர் நியமித்திருக்கிறார். உலகத்தின் மேல் வருகிற உபத்திரவம் நமது கர்த்தரை அடையாளம் காணப்படும்படியாக இருக்கும். ஆனாலும் அது பிதாவானவருடையதைக் காட்டிலும் அதிகமாக இருக்காது. உபத்திரவத்தின் நாள் என்பது யேகோவாவின் நாள் என்று அழைக்கப்படுகிறது. "அந்நாளிலே அவருடைய பாதங்கள் எருசலேமுக்கு கிழக்கே ஒலிவ மலையின் மேல் நிற்கும் என்று நாம் வாசிக்கிறோம்." (சகரியா 14:4)

கடந்த ஆறாயிரம் வருட காலப்பகுதியில் தேவன் மனுக்குலத்திற்கு எதுவும் செய்யாமலிருந்து, திரும்பக் கொடுத்தலின் வேலையைப் பொருத்தவரை அவர் ஓய்ந்திருந்தார். எனினும் அமலேக்கியர் மற்றும் சோதோமியர்களின் விஷயத்தில் தீமை பரப்புவதை தடுப்பதற்கு அவரது குறுக்கீடு இருந்தது. இந்த யுகத்தின் முடிவில், மனுக்குலத்தின் காரியங்களில் அவர் குறுக்கிட்டு, உபத்திரவத்தின் காலத்தில் நீதியை நிறைவேற்றுவார் என்று வேதாகமம் குறிப்பிடுவதாக தெரிகிறது.

வேத வாக்கியங்களில், நீதியானது சரியான தண்டனைக்கு அழைப்பதாக குறிப்பிடப்படுகிறது. கொலை செய்யப்பட்டவர்களின் இரத்தம் பழிவாங்குதலுக்காக கூக்குரலிடுகிறது. பாவமானது சொல்லர்த்தமான கொலையாக இருந்தாலும், அல்லது குற்றத்திற்கு அல்லது தற்கொலைக்கு வழிநடத்தக்கூடிய அநீதியாக இருந்தாலும் இதற்கான சரியான தண்டனையை நீதியானது விரும்புகிறது. ஆதாமின் பிள்ளைகள் துன்பப்பட வேண்டும் என்று நீதியானது கோருகிறது. உலகத்திலிருந்து எடுக்கப்பட்ட கிறிஸ்துவின் சபை என்கிற தனிப்பட்ட வகுப்பாரின் பாவங்கள் மன்னிக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் நீதியையும் சத்தியத்தையும் ஆதரிப்பவர்கள்.

ஆனால் உலகத்தின் மேல் வருகிற உபத்திரவத்தின் காலமே சொல்லப்போனால், நீதியானது தனது பாக்கியை –யெல்லாம் திரும்ப பெறுகிற காலமாக இருக்கும். நீதியானது அதன் "தார்மீக உரிமையை" எடுத்துக் கொள்ளும். அது மனுக்குலத்தின் வேண்டுமென்றே செய்த பாவங்களுக்கான ஈடுகட்டுதலை விரும்புகிறது. கடந்த காலத்தில் ஏழைகளை கெடுத்து பலனை அடைந்தவர்கள், கணக்கை சரிகட்ட நீதியினிடத்தில் வரியை செலுத்த வேண்டியிருக்கும். அப்போஸ்தலர் யாக்கோபு கூறுகிறதாவது: "ஐசுவரியவான்களே, கேளுங்கள், உங்கள் மேல் வரும் நிர்ப்பந்தங்களினிமித்தம் அலறி அழுங்கள்." ( யாக்கோபு 5:1) எனினும் தற்காலத்தில் ஐசுவரியவான்களை தேவன் நியாயந்தீர்த்து வருகிறார் என்று நாம் நினைக்கக்கூடாது. கிறிஸ்துவின் சபையைத் தவிர வேறு யாரும் இப்போது சோதனையில் இல்லை. மற்றவர்கள் உலக மனுக்குலம் பின்பு, அவர்களில் பழிவாங்குதலை தேவன் அனுமதிப்பார். ஆனால் மனிதனின் தீவிரம் தேவனுடைய சந்தர்ப்பமாக இருக்கும். அவரது ராஜ்யத்தை நிர்மாணிக்கக்கூடிய அவரது குறித்த காலம் வரும். இந்த

மனித கோபத்தை மனுக்குலத்தின் நன்மைக்கு ஏதுவாக ஆக்குவார்.

வரவிருக்கிற இந்த உபத்திரவத்திற்கு காரணமாகிறவர்கள் தாங்கள் செய்வது இன்னதென்று அறியாதிருக்கிறார்கள். ஆனால் நீதிக்கான சரிகட்டுதல் பண்ணப்படும் போது மேசியாவின் ராஜ்யம் குறுக்கீடு செய்யும். “அந்த நாட்கள் குறைக்கப்படாதிருந்தால் ஒருவனாகிலும் தப்பிப் போவதில்லை.” கிறிஸ்து பாவத்திற்காக மரித்தார் என்கிற வேதாகம போதனைக்கு நாம் விவரித்திருக்கிற பாவத்திற்கான சரியான தண்டனை என்பது முரண்படவேயில்லை.இயேசு உலகத்தின் பாவக்கடனை தீர்க்கிறார்.

உலகத்தின் பாவக்கடன் ஒரு மரண தண்டனையாக இருந்தது, கர்த்தராகிய இயேசு மரித்து, இந்த பாவக் கடனை தீர்த்திராவிட்டால், உலகமானது விடுவிக்கப்பட்டிருக்கவே முடியாது. எந்த விதத்திலும் எந்த அநீதியும் இல்லாமல் உலகமானது அந்த மரண தண்டனையிலேயே இருந்திருக்கும். கொலைக்கு வழி நடத்திய சுயநலமானது, ஆதாமின் பாவதண்டனைக்காக நமது கர்த்தர் சந்தித்தைக் காட்டிலும் அதிகமானது. அநீதியின் மூலமாக கொலைபாதக நிலைமைகளுக்கு காரணமாயிருந்தவர்கள், இந்த நிலைமைகளுக்கு பொறுப்பாகிறார்கள்.

ஆபேலின் இரத்தம் முதல் சிந்தப்பட்ட சகல நீதிமான்களின் இரத்தப்பழி அந்த சந்ததி மேல் யூத யுகத்தின் முடிவில் வரும் என்று நமது கர்த்தர் சொன்னதை நாம் வாசிக்கிறோம். (மத்தேயு 23:35) யூத ஜாதியின் மேல் அவர்களது யுக முடிவில் வந்த உபத்திரவம் முழுவதுமாக கணக்கை தீர்த்தது. அவர்கள் வெளிச்சத்தையும் அறிவையும் பெற்றிருந்தார்கள். இப்படியாக அவர்கள் பொறுப்பானார்கள். அவர்கள் துன்பப்பட கடமைப்பட்டிருந்தார்கள். ஏனெனில் சிலரால் குற்றம் சாட்டப்பட்டதினால் மாத்திரமல்ல, மற்றவர்களால் ஒப்புதல் அளிக்கப்பட்ட அல்லது உடந்தையாக இருந்த காயங்களினால் அவர்கள் துன்பப்பட கடமைப்பட்டிருந்தார்கள்.

## வெளிச்சமும் பொறுப்பும்

இந்த யுக முடிவில், பெரும்பாலும் அதிக வெளிச்சத்தையும் சில சமயங்களில் ஒளி விலகிய வெளிச்சத்தை மட்டும் பெற்றிருந்த கிறிஸ்தவ தேசங்களின் மேல் கர்த்தரின் நியாயத்தீர்ப்பு வருவதாக காணப்படுகிறது. ஓர் அளவு பொறுப்பு அவர்களிடம் வந்திருக்கிறது. அவர்கள் தண்டனைக்கு தப்பார்கள் என்பது தேவனுடைய உத்தரவாக இருக்கிறது. கர்த்தர் யூதரிடமிருந்து அவர்களது யுகத்தின் முடிவில் செய்தது போல, இந்த சந்ததியிலிருந்து சகல நீதிமான்களின் இரத்தம் இந்த யுகத்தில் சிந்தப்பட வேண்டும் என்று விரும்புகிறார். அப்பொழுது நடந்தது போல, இது மகா ஆபத்தின் நாளுக்கு காரணமாக இருக்கும். உலகத்தைப் பொருத்தவரை இந்த காலத்திற்கும் அந்த காலத்திற்கும் இடையேயுள்ள சம்பந்தத்தை உணர மாட்டார்கள். வேத வாக்கியங்களிலிருந்து மட்டுமே நாம் அறிகிறோம். நாம் மாபெரும் நிதானம் மற்றும் ஆறுதலின் மனதை பெறும்படி தேவன் இந்த புரிந்து கொள்ளுதலை நமக்கு தருகிறார்.

இந்த யுக முடிவில் நடக்கும் உபத்திரவத்தின் தன்மையைக் குறித்து நினைக்கும் போது, இந்த உபத்திரவம் உலகத்தின் மேலும் மற்றும் கபடதாரிகள் மேலும் வரக்கூடியது என்பதை நாம் முதலில் நினைவில் கொள்ள வேண்டும். நாம் உண்மையுள்ளவர்களாயி -ருந்தால் உலகத்தின் மேல் வரக்கூடிய தண்டனைக்குள் நாம் வரமாட்டோம் என்று கர்த்தர் நமக்கு சொல்லுகிறார். சிறு மந்தைக்குள் வருவதற்கு தேவையான உண்மைத் -தன்மை இல்லாதவர்கள் உலகத்தாரோடு இந்த தண்டனைக்குள்ளாக வருவார்கள். ஆகையால் நம்மில் சிலர் கபடதாரிகளோடு தங்கள் பங்கை பெறுவார்கள் என்று கர்த்தர் நமக்கு கூறுகிறார். (மத்தேயு 24:51)

கோதுமை மணி வகுப்பார் மட்டுமே கிறிஸ்துவின் சபையை அமைப்பார்கள். அவர்கள் மட்டுமே களஞ்சியத்தில் சேர்க்கப்படுவார்கள் (மத்தேயு 13:30) களை வகுப்பார் உலகத்தின் மேல் வரக்கூடிய உபத்திரவத்தில் பங்கு பெறுவார்கள். கபடதாரி வகுப்பார் உலகத்தின் ஐசுவரியவான்களோடு உள்ளடக்கப்படுவார்கள். இவர்களை நோக்கித்தான் பரிசுத்த யாக்கோபு 5:1-6 இல் பேசுகிறார். இந்த வசனங்களில் அப்போஸ்தலர் தமது எண்ணத்திலிருந்து விலகி நிற்கிறார். மறுபடியும் அவர் சபையை நோக்கி பேசுகிறார். உபத்திரவமானது ஐசுவரியவான்கள் மேல் கடுமையாக இருக்கும். இவர்கள் அலறி அழுகிறவர்களாக குறிப்பிடப்படுகிறார்கள்.

திரள் கூட்ட வகுப்பானது. இஸ்ரயேலரின் பாவ நிவாரண நாளின் சடங்குகளில் போக்காடாக நிழலாக குறிப்பிடப்படுகிறார்கள். காளை நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவையும் கர்த்தரின் ஆடு உண்மையாக பின்பற்றுகிறவர்களையும் குறிப்பிடுகிறது. (எபிரேயர் 13:11-13) உண்மையுள்ளவர்கள் தங்கள் ஓட்டத்தை முடித்த பிறகு, போக்காடாகிய திரள் கூட்டத்தாருக்கு ஏதோ ஒன்று நடக்கும். பிரதான ஆசாரியன் தன் இரண்டு கைகளையும் வெள்ளாட்டுக்கடாவின் தலையின் மேல் வைத்து இஸ்ரயேல் புத்திரரின் சகல அக்கிரமங்களையும் சுமத்தினான். ( லேவியராகமம் 16:21 ) ஜனங்களின் சகல பாவங்களும், அவைகளை சுமந்து போகும்படி போக்காட்டின் தலையின் மேல் வைக்கப்பட்டன. முழு பாவ நிவாரணத்தையும் செய்யும்படி அனுப்பப்பட்டது. ஆதி பாவத்தை கிறிஸ்து மூலமாக நீக்குவதற்கு தேவன் ஏற்பாடு செய்திருக்கிறார். நீதியின் சரிகட்டுதலுக்கான ஏற்பாடுகளையும் தேவன் செய்திருக்கிறார். உலகத்தின் சகல பாவங்களையும் பொருத்தவரையில், திரளான கூட்ட வகுப்பார் மூலமாக நீங்கும்படி ஏற்பாடு செய்திருக்கிறார்.

இந்த முறையில் யூத யுக முடிவுக்கும் சுவிசேஷ யுக முடிவுக்கும் இடையே ஒற்றுமை இருக்கிறது: இயேசுவின் ஜீவன் எடுக்கப்பட்ட இந்த பழி யூத தேசத்தினிடத்தில் கேட்கப்படும். அதே போல சுவிசேஷ யுக முடிவில் சபையின் ஜீவ பலியின் பழி பெயரளவான ஆவிக்குரிய இஸ்ரயேலரிடம் கேட்கப்படும்.

“ஆபேலின் இரத்தம் முதல் பலிபீடத்துக்கும் தேவாலயத்துக்கும் நடுவே கொலையுண்ட சகரியாவின் இரத்தம் வரைக்கும், உலகத் தோற்றமுதற்கொண்டு சிந்தப்பட்ட சகல தீர்க்கத்தரிசிகளுடைய இரத்தப்பழியும் இந்த சந்ததியினிடத்தில் கேட்கப்படும்” என்று கர்த்தர் சொல்வத்தின் மூலம் இந்த ஆலோசனையை கொடுப்பதாக தெரிகிறது. (லூக்கா 11:50,51) தீர்க்கத்தரிசனத்தில் எழுதப்பட்ட சகல காரியங்களும் நிறைவேறும் என்று பரிசுத்த பவுல் எழுதுகிறார். ஆகையால் இந்த யுக முடிவில் கிறிஸ்தவ தேசங்கள் மேல் அவர்களது தீய செயல்களுக்காக குற்றஞ்சாட்டப்படும். இது இந்த சுவிசேஷ யுகத்தின் சகல துன்பங்களையும் யூதர்களுக்கு எதிரான துன்பங்களையும் மறைமுகமாக உள்ளடக்கும், ஆகையால் ஒரு மாபெரும் உபத்திரவத்தின் காலம் யூத தேசத்தின் மேல் வந்ததற்கு ஒத்தாற்போல் இப்பொழுது சகல கிறிஸ்தவ தேசங்கள் மேல் வரும் என்று வேத வாக்கியங்கள் குறிப்பிடுகின்றன. கிபி 70ல் யூதர்களின் அனுபவங்களுக்கு இணையான அனுபவங்கள் 1915ல் இருக்கும். (இந்த கட்டுரை 1915இல் எழுதப்பட்டது)

R5256

# A word to the Watchers
# காவலாளர்களுக்கு ஒரு வார்த்தை

''நாம் விழித்துக்கொண்டு தெளிந்தவர்களாயிருக்கக்கடவோம்.'' – 1 தெசலோனிக்கியர் 5:6

அப்போஸ்தலர் பவுல் தன்னையும் சேர்த்து சபைக்கு பேசும் போது அவர் கூறுகிறதாவது: "நாம் விழித்துக் கொண்டு தெளிந்தவர்களாயிருக்கக்கடவோம்" என்று கூறுகிறார். அந்த வசனத்தில் அவர் மேசியாவின் ராஜ்யத்தை உண்டாக்குகிற அந்த நாளை விழித்திருந்து கவனிக்க வேண்டும் என்று குறிப்பிடுகிறார். நீதியின் சூரியன் உதயமாவதை எதிர்பார்க்க நாம் அறிவோம். அந்த ஆச்சரியமான நாளின் விடியலில் சபையானது பாவம் மற்றும் மரணத்திலிருந்து விடுவிக்கப்படுகிறது. அவர்களது பங்கு முதலாம் உயிர்த்தெழுதலில் தங்களது கர்த்தரோடு கனம், மகிமை மற்றும் சாகாமையை பெற்றுக்கொள்வது ஆகும்.

அந்த நாள் இரவிலே திருடனைப் போல இரகசியமாக வரும்படியாக தேவன் ஏற்பாடு செய்திருக்கிறார் என்று அப்போஸ்தலர் பவுல் நமக்கு கூறுகிறார். தூங்குகிறவர்கள் அந்த நாள் வந்திருப்பதை அறியமாட்டார்கள். ஆகையால் காத்திருக்கும் சிந்தை எதிர்பார்க்கப்படக் கூடியது அல்ல. நமது ஆண்டவரின் வார்த்தைகளாவது: "நீங்கள் நினையாத நேரத்தில் அந்த நாள் உங்கள் மேல் வராதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்... ஆகையால்.... விழித்திருங்கள்.'' (லூக்கா 21:34,36) அவர் காரியத்தை தெளிவின்மையில் விட்டிருக்கிறார் என்று நாம் நம்புகிறோம். ஏனெனில் அதன் சரியான நேரத்தை அறியாமலிருப்பது நல்லதாக இருக்கும். உதாரணத்திற்கு இருண்ட காலமாகிய நீண்ட காலப்பகுதியில் கிறிஸ்துவின் இரண்டாம் வருகை எப்பொழுது இருக்கும் என்பதை அறியாதிருந்தது நல்லதாக இருந்தது. ஆச்சரியமான நிகழ்வுகள் அவர்களது காலத்தில் இருந்தன. அந்த நாள் நெருங்க, நெருங்க ஒவ்வொரு நாளும் நிகழ்வுகள் இன்னும் அதிகமதிகமாக இருந்திருந்ததை நாம் வாசிக்கிறோம்.

சத்துருவானவன் கர்த்தரினிடத்தில் தீங்கு செய்வதற்கு அவனது முயற்சியில் மிகவும் சுறுசுறுப்பாக எப்பொழுதும் இருக்கும்பொழுது கடைசி நாட்களில் அவனது தீமையான செல்வாக்கில் இன்னும் கவர்ச்சிமிக்கவனாக இருப்பான். ஆகையால் அந்த நாள் அருகே நெருங்கும் போது அவனது ஒவ்வொரு முனைத்தாக்குதலிலிருந்தும் பாதுகாக்க இன்னும் அதிகமதிகமாக நாம் விழிப்புள்ளவர்களாக இருக்க வேண்டும். இந்த விழித்திருத்தலை செய்யும்படி நம்மை அனுமதித்து, உண்மையுள்ளவர்களுக்கு பரிசளிப்பார். ஏனெனில் அவர் காவலாளர் மேல் சந்தோஷப்படுகிறார். இவர்கள் அக்கறையில்லாமல் இருக்கமாட்டார்கள். அஜாக்கிரதை உள்ளவர்கள் யாரும் ராஜ்ய வகுப்பில் இருக்கமாட்டார்கள். ஏனெனில் தேவன் மகிமைப்படுத்த விரும்புகிறதற்கு ஏற்ற வகையில் அவர்கள் இருக்கமாட்டார்கள்.

விழித்திருக்கிறவர்கள் அவரது திட்டத்தை இன்னும் அதிகமதிகமாக அறிந்துகொள்ளுவதற்கு விழிப்புள்ளவர்–களாக இருக்க வேண்டும் என்று விரும்புகிறார். அவர்கள் விழித்திருக்கிறபடியால் இவர்கள் கிருபையிலும் அறிவிலும் வளருவார்கள். அவர்கள் உலகத்தாரைப் போல இருக்கமாட்டார்கள். உலகமானது மயக்கத்தில் இருக்கும். அந்த நாளுக்கு அவர்கள் தகுதியுள்ளவர்களாக இருக்கமாட்டார்கள். தற்காலத்தில் முழு உலகத்தையும் இருளானது மூடிக்கொண்டிக்கிறது. ஆனால் தேவனுடைய பிள்ளைகள் ஒரு விசேஷித்த ஒளியை பெற்றிருக்கிறார்கள். அந்த ஒளியை அவர்கள் நேசிக்கிறார்கள். "உம்முடைய வசனம் என் கால்களுக்கு தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது.'' (சங்கீதம் 119:105) இது தூரத்திலிருந்து வருகிற சந்திரனுடைய வெளிச்சத்தைப் போல அல்ல. ஆனால் அதற்காக விழித்திருக்கிறவர்களின் காலடியில் இருக்கிற சிறிய வெளிச்சம் இது. தூங்கப்போகிறவர்கள் தங்கள் வெளிச்சம் தங்களை விட்டு போவதைக் காண்பார்கள்.

### புதிய நாளின் ரூபகாரங்கள்

கர்த்தர் தம்முடைய பிள்ளைகளுக்கு யுகம் முழுவதும் குறித்து வைத்திருக்கிற வழி குறுகலான வழி – மிகவும் ஒரு குறுகலான வழி. தேடுகிறவர்களுக்கு, காத்திருக்கிறவர்–களுக்கு, விழித்திருக்கிறவர்களுக்கு மாத்திரமே அவரது வெளிச்சம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இவர்கள் காலையின் விடியலை கண்டு கொள்வார்கள்.

மற்றவர்கள் காணமாட்டார்கள். புதிய நாளின் ஆரம்ப ஒளிக்கதிர்களை பற்றிக் கொள்ளும்படி அவர்கள் விழித்திருக்கவில்லை. புதிய நாளின் ரூபகாரங்கள் வெளியாகும் பொழுது, அவர்கள் முற்றிலும் மயக்கத்திலிருப்பார்கள். உதாரணத்திற்கு நமது நாளின் ஆச்சரியமான ஆசீர்வாதங்கள் புதிய யுகத்தின் வெளிப்பாடாகும். விடியல் இங்கே இருக்கிறது. ஜனங்கள் காணாததால் நாம் ஆச்சரியப்படுகிறோம். இந்த ஆச்சரியமான காரியங்களுக்கு அவர்கள் பல்வேறு காரணங்களை சாட்டுகிறார்கள். மனிதன் குரங்கு நிலையிலிருந்து அடுத்த நிலைக்கு முன்னேறுகிற ஒரு படியின் பலன் என்று அவர்கள் நினைக்கிறார்கள். கச்சேரிகள், ஆலயங்கள் முதலானவைகளுக்கு செல்லுகிற அளவுக்கு புத்திசாலியாக ஆகியிருக்கிறான். அவன் குரங்கிலிருந்து அதிக தூரம் செல்கிறான். நீராவி மற்றும் மின்சாரத்தின் சக்தியை பயன்படுத்துவது என்பது நாம் மூளைத்திறன் யுகத்தில் நுழைகிறோம் என்பதை நிரூபிக்கிறது! புதிய கண்டுபிடிப்புகளை உருவாக்குகிறவர்கள் சிலர் என்பதை அவர்கள் மறந்து விடுகிறார்கள்.

இந்த மாபெரும் சகல ஆசீர்வாதங்களும் புதிய யுகத்தின் ஆசீர்வாதங்கள் என்பதை நாம் காணக்கூடும். தேவன் இதை நிகழச் செய்கிறார். மனிதர்களுக்கு அதின் பயன்படக்கூடிய ஆச்சரியமான கண்டுபிடிப்புகளை அதிக படித்தவர்கள் அல்ல, குறைவாக படித்தவர்களே கண்டுபிடித்திருக்கிறார்கள் என்பதை நாம் பார்க்கிறோம். உலகம் இதுவரை அறிந்திராத, குறைவாக படித்தவர்களால் கண்டுபிடிக்கப்பட்ட கண்டுபிடிப்புகள் எல்லாம் மாபெரும் ஆசீர்வாதங்களை நிரூபிக்கின்றன. இவைகள் எல்லாம் அவர்கள் கூறுகிறபடி, ''மூளைத்திறன் யுகத்தினால்'' உண்டானவைகள் அல்ல. தற்கால சந்ததியில் யாரையும் ஷேக்ஸ்பியருக்கு ஒப்பிட முடியாது. பரிசுத்த பவுலுக்கு யாரும் ஒப்பிடப்பட முடியாது. சாலமோன், தாவீது, மோசே போன்றவர்களுக்கு யாரையும் ஒப்பிட முடியாது.

### காவலாளர்கள் ஒரு நோக்கத்திற்காக

அப்போஸ்தலர் கூறுகிறதாவது: "நாம் விழித்துக் கொண்டு தெளிந்தவர்களாயிருக்கக்கடவோம்.'' இங்கே அவர் நரம்பு மண்டலத்தை பலவீனப்படுத்துகிற புகையிலை, மதுபானம் போன்றவைகளிலிருந்து விலகியிருப்பதை குறிப்பிடவில்லை. நாம் உள்ளத்தில்

விழித்திருந்து தெளிந்தவர்களாயிருக்க வேண்டும் என்பதே அதன் கருத்து. உற்சாகமான ஒரு மாபெரும் ஜனங்களை நாம் பார்க்கிறோம். அவர்கள் ஒவ்வொரு சுவிசேஷ காற்றின் மூலமாக தூக்கிச் செல்லப்பட்டிருக்கிறார்கள். அவர் ஏற்றுக்கொள்வதற்கான காரணத்தை அவர்களால் கொடுக்க முடியாது. சத்தியமானது விழித்துக் கொண்டிருக்கிற ஒரு ஜனத்தின் வகுப்பாருக்கு மட்டுமே கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அவர்கள் அறியவில்லை.

இந்த புதிய நாளின் பெருகிவரும் அடையாளங்க –ளையும் எவ்வளவு ஜாக்கிரதையாக கூர்ந்து நோக்க வேண்டும்! வேலையில் நிற்கும் காவலாளர் நடக்கிறவை –களைக் கண்டு வாயை மூடிக்கொண்டிருந்தால் பிரயோஜனமேயில்லை. ஒரு நோக்கத்திற்காக நமக்கு ஒரு காவலாளர் தேவை! விழித்திருக்கிறவர்கள் இந்த ஆச்சரியமானவைகளைக் குறித்து மற்றவர்களின் கவனத்தை ஈர்க்க வேண்டும். அவர்கள் விசுவாசக் குடும்பத்தாரை எழுப்ப வேண்டும்.

நம்மைப் போன்று முழுமையாக அர்ப்பணம் பண்ணினவர்கள் இருக்கிறார்கள். ஆனால் விழிப்பாக மட்டும் இருக்கவில்லை. இந்த ஆச்சரியமான காரியங்களை அவர்கள் காணும்படி அவர்களை எழுப்ப ஒரு அன்பான அசைவை நாம் கொடுக்க வேண்டும். நாம் சீக்கிரத்தில் கலியாணத்திற்கு அழைக்கப்படவிருப்பதால், நமது வஸ்திரத்தை வெண்மையாக வைத்திருக்க வேண்டும் என்பதை ஞாபகத்தில் வைக்க வேண்டும். சில குறிக்கோள்களுக்கு நாம் விழித்திருக்க வேண்டும். நமது மணவாளன் எவ்வளவு அருகே இருக்கிறார் என்பதை நாம் உணருவோமானால், நமது வஸ்திரங்களைக் குறித்து நாம் எவ்வளவு ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்! மணவாளன் எவ்வளவு அருகே இருக்கிறார் என்பதை தெரிந்து கொள்ளப்பட்ட மணவாட்டி அறிந்திருக்கிறார்கள், மற்றவர்கள் அறியார்கள். அவள் விழித்துக்கொண்டு தெளிந்தவளாயிருப்பாள்.

ஒரு வகையில் பார்த்தால், உற்சாகமூட்டக்கூடிய அநேக காரியங்கள் இருக்கலாம். நாம் ஆச்சரியமானவைகளைப் பார்த்து, மேலேயும் கீழேயும் குதித்து, கைகளை தட்டுவோம். ஆனால் இது அப்படியல்ல. நாம் தெளிந்தவர்களாயிருக்க வேண்டும். நாம் புத்தியில்லாமலோ, மந்தமாகவோ இருக்கக் கூடாது. நாம் பயன்படுத்தவேண்டிய இந்த அறிவை கர்த்தர் நமக்கு கொடுத்துக் கொண்டிருக்கிறார் என்பதை நாம் ஞாபகத்தில் வைக்க வேண்டும். நாம் இதை அதிகமதிகமாக பயன்படுத்த வேண்டும். நமது அபூரணங்களை நாம் அதிக தெளிவாக பார்ப்பதால், நாம் விழித்திருந்து தெளிந்த –வர்களாக இருந்து அதற்கேற்றாற் போல நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். நாம் மற்றவர்களுக்கு உதவியாக இருந்து, நாம் அதிகமதிகமாக ஆவியின் கனிகளாகிய பொறுமை, தயவு, சாந்தம், சகோதர அன்பு மற்றும் அன்பு போன்றவைகளை அணிந்து கொள்வோம். மேலும் நாம் விழித்திருப்பதால் கோபம், வன்மம், பகைகள், பொறாமைகள், சண்டைகள் முதலானவைகளை களைந்து போட வேண்டும். இப்படியாக நாம் மணவாளனுக்கு பிரியமானவர்களாக, சந்தோஷம் கொடுக்கக்கூடிய –வர்களாக இருப்போம். இப்படியாக நாம், இப்போது அருகிலிருக்கிற வாசலில் இருக்கிற சந்தோஷங்கள் மற்றும் ஆசீர்வாதங்களுக்குள் அவருடன் நுழைய நம்மை நாமே தயார்படுத்திக் கொள்கிறவர்களாக இருப்போம்.

**R5257**

## The messengers of God in "The Last Days"

## "கடைசி நாட்களில்" தேவனுடைய தூதர்கள்

''உன் வழிகளிளெல்லாம் உன்னைக் காக்கும்படி, உனக்காக தம்முடைய தூதர்களுக்கு கட்டளையிடுவார்;''– சங்கீதம் 91:11

இந்த "தீங்கு நாளின்" "அபாயகரமான காலத்தின்" மத்தியில் பரிசுத்த தீர்க்கதரிசிகள் மற்றும் அப்போஸ்தலரின் எச்சரிக்கையான குரல்கள் கண்ணிகள், கொள்ளை நோய்கள் மற்றும் நுட்பமான ஆபத்துக்களை குறிப்பாக கூறுகின்றன. மேலும் இதன் மத்தியில் கூட தீமைகளும் ஆபத்துக்களும் உண்மையாக இருப்பதை உணரும் சிந்தையும், தெய்வீக பாதுகாப்பு, அக்கறை மற்றும் தனிப்பட்ட அன்பு ஆகியவற்றின் உறுதி மொழியும் பரிசுத்தவான்களுக்கு எவ்வளவு விலையேறப்பெற்றது!

நமது தலைப்பு வசனத்தில் செய்தியை கொடுக்கக்கூடிய –வராக குறிப்பிடப்படுகிறவர் பரம பிதாவாகிய யேகோவா. தீர்க்கதரிசி தாவீது சில நபர்களைப் பற்றியும் பிறகு எதிர் –காலத்தைக் குறித்தும் தீர்க்கதரிசனம் உரைக்கிறார். குறிப்பிடப்படுகிற அந்த நபர் முதலாவதாக கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என்று நாங்கள் நம்புகிறோம்; இரண்டாவதாக, சுவிசேஷ யுகம் முழுவதும் அவரது சரீர அங்கங்களாக ஏற்றுக்கொள்ளப்பட்டவர்கள் மொத்தத்தில் தலையும் அங்கங்களும் இணைந்த மேசியா வகுப்பார். இந்த வசனம் இந்த வகுப்பாரின் மேல் தேவனுடைய ஒரு விசேஷித்த அக்கறையை குறிக்கிறது. சகல வேத வாக்கியங்கள் மூலமாகவும் அவர்கள் தேவனால் அக்கறையும் அன்பும் காட்டப்படுகிறவர்கள் என்று குறிப்பிடப்படுகிறார்கள். நமது கர்த்தராகிய இயேசு, ஒரே பேறானவராகவும், பிரியமான குமாரனாகவும் இருக்கிறார். அவரது அங்கங்களாக இருக்கக் கூடிய அனைவரும் விசேஷமாக சிநேகிக்கப்படுகிறார்கள். இயேசு தமது உண்மையுள்ள சீஷர்களிடம் கூறுகிறதாவது: "பிதா தாமே உங்களை சிநேகிக்கிறார்." (யோவான் 16:27)

தூதர்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட பொறுப்பு ஒரு பரந்த உபயோகத்தைப் பெற்றிருக்கிறது என்று நாங்கள் புரிந்து கொள்ளுகிறோம். இந்த சுவிசேஷ யுகத்தில் இரட்சிக்கப்படு –கிறவர்களும், இரட்சிப்பை சுதந்தரிக்கப் போகிறவர்களினிமித்தமாக ஊழியம் செய்யும்படிக்கு தேவனுடைய தூதர்கள் அனுப்பப்படும் ஆவிகளாக இருக்கிறார்கள் என்று அப்போஸ்தலர் பவுல் நமக்கு உறுதி கூறுகிறார். ஆம், இவர்கள் கிறிஸ்துவுக்குள் விசுவாசிகளும், இருதயத்தில் உண்மையுள்ளவர்களும், கர்த்தருக்கு முழுமையாக அர்ப்பணம் செய்தவர்களும், ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்டவர்களுமாய் இருப்பதினால், அவரது கிருபையின் விசேஷித்த சந்தோஷமானவர்களாய் இருந்து, காணப்படாத தூதர்களால் ஊழியம் செய்யப்படுகிறவர்களாக இருக்கிறார்கள். இதே கருத்தையே நமது கர்த்தராகிய இயேசு தமது அறிக்கையில் வைக்கிறார்: "அவர்களுக்குரிய தேவதூதர்கள் பரலோகத்தில் என் பரம பிதாவின் சமுகத்தை எப்பொழுதும் தரிசிக்கிறார்கள்." (மத்தேயு 18:10) ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட தேவதூதர்கள் மிகவும் தெரிந்து கொள்ளப்பட்ட, அர்ப்பணம் செய்து கொண்டவர் மேல் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்று இந்த வசனம் நமக்கு சுட்டிக் காட்டுவதாக காணப்படுகிறது.

அப்போஸ்தலரிலிருந்து வேறு வகையாக நமது ஆண்டவர் கூறுகிறார். இந்த தூதர்கள் நமக்கான காரியங்களில் தாமதப்படுத்த மாட்டார்கள் என்று நமது ஆண்டவர் உறுதியாக கூறுகிறார். அவர்கள் முக்கியமான பரலோக காரியங்களினால் தடை செய்யப்பட மாட்டார்கள். ஆனால் நமக்கு தேவையான அனைத்து காரியங்களுக்காகவும் அவர்கள் உடனே தெய்வீக பிரசன்னத்திற்கு செல்லக்கூடியவர்களாக இருப்பார்கள். நமது கர்த்தரை தலையான குமாரனாகக் கொண்டு நாம் அவருக்கு கீழாக வீட்டின் குமாரர்களாக இருக்கிறோம் என்பதை அவர் நம்மை உணரும்படி செய்கிறார். ஆகையால் நமது காரியங்களை பிதாவினிடத்தில் எடுத்துச் செல்வதற்கு காலதாமதம் ஆகாது. நமது அக்கறைதான் முதலிடத்தில் இருக்கும். நமது தேவதூதர்கள் எப்பொழுதும் பிதாவினிடத்தில் போகக்கூடியவர்களாக இருப்பார்கள். நாம் பேசுவதற்கு முன்னே நமது மனதை அவர் அறிகிறார். நமக்கு தேவையானதை நாம் உணருமுன்னே, அவைகளை நமக்கு தரும்படி ஏற்பாடு செய்கிறார். ஒரு ஆச்சரியமான விழித்திருந்து கவனித்தல் நமக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. நமது தேவைக்கான இப்படிப்பட்ட கவனிப்பு மற்றும் சிரத்தையை எப்படி சர்வவல்லையுள்ள தேவன் கொடுக்க முடியும் என்பதை நாம் புரிந்து கொள்வது கடினமானது. தேவன் இப்படிப்பட்ட அன்பான கவனிப்பை நம்மீது வெளிப்படுத்தியிருக்கிறார். நாம் எவ்வளவு அற்பமானவர்களாக, இப்படிப்பட்ட ஆசீர்வாதங்களுக்கு எந்த அளவுக்கு தகுதியற்றவர்களாக இருக்கிறோம் என்பதை அது நம்மை உணரச் செய்ய வேண்டும்.

பிதாவானவர் இப்படி பரலோக தூதர்களை பயன்படுத்தினாலும், கர்த்தரின் பூமிக்குரிய பிள்ளைகளை அடிக்கடி ஊழியர்களாகவும், சேவகர்களாகவும் ஒருவருக்கொருவர் பயன்படுத்தி வருகிறார் என்ற கருத்தை எந்தவிதத்திலும் பயனற்றதாக்காது. உண்மையிலேயே, காணக்கூடாத தூதர்கள், மனித கருவிகள் மூலமாக கிரியை செய்ய பொதுவாக தேவைப்படுகிறார்கள். இதற்கு, பிரசன்னமாயிருக்கும் கர்த்தரின் மேற்பார்வையின் கீழ் அறுவடை வேலையின் விளக்கங்களைப் பெற்றிருக்கிறோம். மாம்சத்தில் இருக்கும் அவரது சரீர அங்கங்களின் முக்கியமான ஈடுபாடுகளில் அவரது பரலோக சேனைகளும் இருக்கிறார்கள்.

கர்த்தர் தமது ஊழியக்காரர்களை அக்கினி ஜுவாலைகளாக மாற்றுகிறார் என்று அப்போஸ்தலர் பவுல் அறிவித்திருக்கிறார். மேலும் எந்த மற்றும் ஒவ்வொரு ஏஜென்ஸி மற்றும் வல்லமையை தம்முடைய ஜனங்களை கவனிக்கும்படி தெய்வீக பாரமரிப்பு பயன்படுத்துகிறது என்றும் அறிவிக்கிறார். (எபிரேயர் 1:7) வேறு வார்த்தையில் சொல்வோமானால் தேவனால் பயன்படுத்தப்படும் ஒவ்வொரு ஏஜென்சியும், அது அக்கினியாக, மின்சாரமாக அல்லது மனிதனாக, அல்லது வேறு எதுவாக இருந்தாலும், அது தேவனுடைய தூதனாக இருப்பார். அவர் தேர்ந்தெடுத்தது, அவர் புகழும்படியாக இல்லையென்றால் சங்கீதம் 76:10இல் அவர் கூறியுள்ளது போல் அதை அவரால் அடக்க முடியும்.

## ஜெயங்கொண்டவர்கள் சோதனையில் அபிவிருத்தி அடைந்தவர்கள்

இந்த தேவ தூதர்கள் "உன் வழிகளிலெல்லாம் உன்னை காக்கும்படி" இருக்கிறார்கள். சகல சபை காரியங்களில் மாத்திரமல்ல, தனிப்பட்டவர்களுக்காகவும் மொத்தமாகவும் இன்னும் எல்லா காலத்திலும் ஆகும். அது இருண்ட காலங்களிலும் மற்ற காலங்களிலும் காக்கப்பட்டு வந்தது. ஆனால் இந்த கவனிப்பு நம்மை சோதனைகளிலிருந்து காக்காது. சோதனைகள் இல்லாமல் யாரும் இந்த தெரிந்துக்கொள்ளப்பட்ட சபையில் இருக்க முடியாது. ஜெயங்கொள்ளும் குணலட்சணங்களை பெற வேண்டும் என்றால் அவர்கள் சோதனைகளை பெற வேண்டும். ஆனால் கர்த்தருடைய வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட கிருபை, உதவிக்காக அவர்களுடன் இருக்கும்; அதை ஜெயங்கொள்ளு -வதற்காக அல்ல, நிலைத்து நிற்க. அவரது கிருபை நமக்கு போதுமானதாக இருக்கிறது. ஒரு அற்பமான சித்தத்திற்கு அவர் ஈடு செய்யமாட்டார்; ஆனால் அபூரண சரீரங்களுக்காக ஈடு செய்வார். சித்தம் அற்பமானதாக இருந்தால் அப்படிப்பட்டவர்களை அவரது தெரிந்து கொள்ளப்பட்ட சபையில் அவர் விரும்ப மாட்டார். அவர் தமது பிள்ளைகள் சித்தத்தில் பலமுள்ளவர்களாக, சந்தேகம் இல்லாதவர்களாக, ஜெயங்கொள்கிறவர்களாக இருக்க வேண்டும் என்று விரும்புகிறார்.

நமது தலைப்பு வசனத்திற்கு அடுத்த வசனம், தலையும் சரீரமும் சேர்ந்த சபையின் காரியங்களில் பொறுப்பெடுத்துக் கொண்டிருக்கிற இந்த தேவதூதர்கள், கால்கள் கல்லில் இடறாதபடி பார்த்துக் கொள்வார்கள் என்று கூறுகிறது. நாம், கால்கள் என்பதை இந்த யுகம் முழுவதும் உள்ள சில அங்கங்கள் என்று எடுத்துக் கொள்ளலாம். உதாரணமாக, ஒரு அங்கம் கை, இன்னொரு அங்கம் கால் முதலியன. சுவிசேஷ யுகம் முழுவதும் ஆரம்ப முதல் முடிவு வரை உள்ள சபையை தாங்குகிற அந்த கால் அங்கங்கள் சரியாய் நிற்க வழி நடத்தப்படுவார்கள்; "உம்முடைய வசனம் என் கால்களுக்கு தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது." (சங்கீதம் 119:105) இப்படியாக அவர்கள் அவர்களது வழியில் உள்ள சிரமங்களை ஜெயங்கொள்ளும்படி இயக்கப்படுவார்கள்.

ஆகையால் சுவிசேஷ யுகம் முழுவதும் கர்த்தருடைய தூதர்கள், அவரது ஜனங்களின் சகல சோதனைகளிலும் உதவி செய்திருக்கிறார்கள். எனினும் இந்த கால்கள் என்பது கிறிஸ்துவின் கடைசி சரீர அங்கங்களை குறிப்பதாக காணப்படுகிறது. "சமாதானத்தை கூறி நற்காரியங்களை சுவிசேஷமாய் அறிவித்து, இரட்சிப்பை பிரசித்தப்படுத்தி, உன் தேவன் ராஜரீகம் பண்ணுகிறார் என்று சீயோனுக்கு சொல்லுகிற சுவிசேஷகனுடைய பாதங்கள்..... எவ்வளவு அழகாயிருக்கின்றன." (ஏசாயா 52:7) இது சபையின் கடைசி அங்கங்களுக்கு பொருந்துவதாகக் காணப்படுகிறது. இது யுகம் முழுவதும் உள்ள அங்கங்களை குறிக்காது. தற்காலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிற நமக்கு மட்டுமே இது பொருந்துவதாக இருக்கிறது.

நாம் பார்க்கிற இந்த பல்வேறு செயல்பாட்டின் வெளிப்பாடுகள் ஆரம்பத்தில் இருக்கின்றன. புதிய ஆட்சி திறந்து மட்டுமே இருக்கிறது. நமது கர்த்தர் சபையை மீட்டு மகிமைப்படுத்தின பிறகு உலகத்துடனான வேலையை ஆரம்பிப்பார். "உன் தேவன் ராஜரீகம் பண்ணுகிறார்" என்று கடந்த காலத்தில் சொல்ல யாருக்கும் உரிமை கிடையாது. ஆனால் 1878லிருந்து இந்த பிரகடனத்தை நாம் செய்து வருகிறோம்.

## கிறிஸ்துவின் பிரசன்னம் இடறுதற்கான ஒரு கல்

இந்த சமயத்தில் பாத அங்கங்கள் ஒரு விசேஷித்த

சோதனையில் இருப்பார்கள் என்றும் இடறுதற்கான ஒரு கல்லாகவும் இருப்பார்கள் என்றும் இந்த வாக்கியம் குறிப்பதாக காணப்படுகிறது. "இஸ்ரயேலின் இரண்டு கோத்திரத்துக்கும் தடுக்கலின் கல்லும் இடறுதலின் கன்மலையுமாயும்..... இருப்பார்." (ஏசாயா 8:14) இந்த கல் யூத யுகத்தின் முடிவில் இடறுதற்கேதுவாயிருந்தது. (1 பேதுரு 2:8) வேத வாக்கியங்கள் இயேசுவை வழியாக நிர்ணயித்திருக்கிறது. கர்த்தர் அநேகரின் வழியில் இடறுதலின் கல்லாக இருக்கிறார். இந்த வழிகள் உலகத்தாருக்கு குறிக்கப்படவில்லை. இயேசுவின் முதலாம் வருகையில் புறஜாதி தேசங்கள் அவரில் இடறவில்லை. ஆனால் உண்மையான இஸ்ரயேலரில் சிலர் இடறினார்கள். சில உண்மையான ஆவிக்குரிய இஸ்ரயேலர்கள் இடறினதற்கு காரணம், அவர்கள் கற்பனைபண்ணியிருந்ததற்கு முற்றிலும் மாறாக கிறிஸ்துவின் பிரசன்னம் இருந்ததுதான் என்று வசனம் பொருள்படுகிறது. ஆகையால் அநேக நல்ல கிறிஸ்தவ ஜனங்கள் இன்று கிறிஸ்துவின் பிரசனத்தினால் இடறுகிறார்கள் என்று நாங்கள் நம்புகிறோம். அவர்கள் இன்ன இன்னதை நினைத்தார்கள் அவர்கள் இன்ன இன்னதை கற்பனை செய்தார்கள். ஆனால் எல்லாம் அவர்கள் நினைத்ததற்கும் எதிர்பார்த்தற்கும் மாறாக இருந்தது. இது யூத யுகமுடிவில் ரபிமார்கள் இடறினதைப்போல இருக்கிறது.

சகல நல்ல ஜனங்களும் இடறாதபடி தேவதூதர்கள் ஏன் பொறுப்பெடுத்துக் கொள்ளக்கூடாது என்ற கேள்வி எழுகிறது. இது வாக்குத்தத்தம் இல்லையா? தெரிந்துகொள்ளப்பட்ட வகுப்பினர் அனைவருக்கும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டிருக்கிறது என்று நாங்கள் பதில் அளிக்கிறோம். ஆனால் இந்த சரீரத்தின் அங்கங்களாக தொடர்ந்து இருப்பதற்கு, அவர்கள் அனைவரும் சோதனைக்கு நிற்க வேண்டும். அது ஒரு பரீட்சையாக இருக்கும். அவர்கள் தேவதூதர்களின் உதவியை பெற விரும்புகிறார்களா? அவர்கள் இந்த கஷ்டங்களை ஜெயங்கொண்டு வழியில் தொடர்ந்து இருக்க விரும்புகிறார்களா?

ஒரு வகுப்பார் சோதனைகளை சரியான முறையில் பெற்றுக்கொள்ளும் நிலையில் இருப்பார்கள். இன்னொரு வகுப்பார் அதிகமாக சுய நம்பிக்கையுடன் இந்த வாழ்வின் காரியங்களில் அதிக சுமையை அடைந்து, ஆவிக்குரிய அபிவிருத்தியில் பின்னடைந்து இருப்பார்கள். அவர்கள் தூதர்களின் உதவியை பெறுவதற்கு தயாராக இருக்க மாட்டார்கள். ஏனெனில் உலகத்தினால் ஏற்றுக்கொள்ள முடியாமல் இருக்கிறவர்களை தேவன் அவரது தூதர்களாக பயன்படுத்துகிறார்.

## யூத யுகத்திற்கும் சுவிசேஷ யுகத்திற்கும் இடையேயான இணை

யூத யுகத்தில், வேதபாரகர்களும் நியாய சாஸ்திரிகளும் ஏற்றுக்கொள்ளவே முடியாதவர்களை கர்த்தர் பயன்படுத்தினார். அவர் ஜனங்களுக்கு போதிக்க முகவர்களையோ, தூதர்களையோ, பயன்படுத்த விரும்பியிருந்தால், அவர் ஏன் அந்த நாளின் படித்த நியாய சாஸ்திரிகளையோ ஆடம்பரமான பரிசேயர்களையோ தேர்ந்தெடுக்கவில்லை? போதகர்களாகவும் ஆசிரியர்களாகவும் இருக்க முற்றிலுமாக தகுதியே இல்லாதவர்கள் என்று படித்தவர்கள் நினைக்கின்ற மீன் பிடிக்கிறவர்களையும் வரி வசூலிப்பவர்களையும் ஏன் கர்த்தர் தூதர்களாக பயன்படுத்தினார்? யூத யுக முடிவில் அவர்களில் இருவரை (எல்லாரையுமே) பேதமையுள்ளவர்கள் என்றும் கல்லாதவர்கள் என்றும் ஜனங்கள் உணர்ந்து கொண்டார்கள் என்பதை நினைவில் கொள்வோம். (அப்போஸ்தலர் 4:13) தேவன் அந்த நாளின் படித்தவர்களை எப்படி ஒதுக்க முடிந்தது? "இவைகளை ஞானிகளுக்கும் கல்விமான்களுக்கும் மறைத்து, பாலகருக்கு வெளிப்படுத்தினபடியால் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன். ஆம், பிதாவே! இப்படி செய்வது உமது திருவுளத்திற்கு பிரியமாக இருந்தது." (மத்தேயு 11:25,26)

ஆகையால் இன்றைக்கு அநேகரால் ஏற்றுக்கொள்ளப்படமுடியாதவர்களை கர்த்தர் வாய்க்கால்களாகவும், முகவர்களாகவும் தூதர்களாகவும் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார். இவர்கள் தங்கள் மனதை விசுவாசிப்பதற்கு தயார் செய்தாலும், அதில் அவர்கள் மந்தமாக இருக்கிறார்கள். ஏனெனில் இந்த வாழ்க்கையின் கவலைகள் அவர்களை அமுத்துகிறது. தெரிந்துகொள்ளப்பட்ட கூட்டம் தயார் படுத்தப்படும். பிறகு மற்றவர்கள் கூறுவார்கள்: "ஆண்டவரே, ஆண்டவரே, எங்களுக்கு திறக்க வேண்டும்." (மத்தேயு 25:11) ஆனால் கர்த்தர் அவர்களை தமது சரீர அங்கங்களாக, தெரிந்துகொள்ளப்பட்டவர்களாக அறியேன் என்று கூறுவார். இந்த சரீரத்தில் ஒரு இடத்தை அவர்களுக்கு கொடுப்பதற்கு தேவையான சாந்தம், தயவு, பொறுமை மற்றும் அன்பின் ஆவியை அவர்கள் காண்பிக்கவில்லை. தேவனோடு பலியின் உடன்படிக்கையை மரணபரியந்தம் செய்திருக்கிற அனைவருக்கும் அன்பு, விசுவாசம், தேவனுயை சித்தத்துக்கு கீழ்ப்படிதல் ஆகியவைகளில் சோதிக்கும்படி அனுமதிக்கப்பட்டிருக்கிற சோதனைகளிலும் துன்பங்களிலிருந்தும் சரீர அங்கங்கள் மட்டுமே தூதர்களால் பாதுகாக்கப்பட்டு உயர்த்தப்படுவார்கள்.

---

ஏழாம் சபையின் தூதனாகிய
சகோ. C.T. **ரசல்** அவர்களின் ரீ-பிரிண்ட்ஸின் தமிழாக்கத்தை வெளியிடுகிறோம்.

வெளியிடுபவர் :
சகோ. R. **செல்வராஜ்,** சென்னை வேதமாணவர் சபை
எண். 22, முதல் தெரு,ராஜீவ் நகர், காலடிப்பேட்டை, திருவொற்றியூர், சென்னை-600 019.
கைபேசி : 97909 00030, மின்னஞ்சல் : mbsa_selvaraj@rediffmail.com
Website : www.thestudiesinthescriptures.com
**FOR PRIVATE CIRCULATION ONLY**